மன்ற

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 2 | மாதமிருமுறை ★ 1-7-53 ★ விலை அணா 4

கொள்ளைக்காரனும், கொடுங்கோலனும்

வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு

Maximum light given.

Best copy available.

...க்கள் கொடுக்கும் வரிப்பணத்தைக்கொண்டு, மக்கள் குற்றங்களைந்து - குறை பெய்து - தேவைகளை நிறைவேற்றுவதற்கென்று அமைந்த அமைப்பே ... என்பது. அந்த அரசை இயக்குவிப்பவன் ...பெல்லாம் அரசனாக இருந்தான்.; இப்பொழுது ...ால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவனாக இருக்...ன்.

"...கொள்வதூம் மிகை கொளாது கொடுப்பதூஉம் ...படாது" என்று வணிகரின் தன்மை பற்றிப் ...ப்பாலில் கூறும் இலக்கணம் அரசனுக்கும் ஒரு ...கயில் பொருந்திவரக் கூடியதாகும். மக்களி... இருந்து வாங்கும் வரிப்பணம் அளவுக்கு மீறி...க வாங்கப்படுவதாக இல்லாமலும், மக்களுக் ...செய்யும் நன்மைகள் அளவுக்குக் குறைந்து மிக குறைந்து போகாமலும் காக்கப்படும் ஆட்சியை ...ட்சி என்று கூற இயலாவிட்டாலும். கேடற்ற ... என்று கூறலாம். மக்களிடத்துப் பெறும் ...ணம் குறைவு போலத் தோன்றி. மக்களுக்குச் ...யும் நன்மைகள் மிகவாகத் தோன்றுமானால் அப் ...ட்ட ஆட்சியை நல்லாட்சி என்று போற்றலா... மக்கள் தாங்க முடியாத அளவுக்கு வரியை மிக அவர்களிடமிருந்து வாங்கி. மக்களுக்கு நன்மை ...காத வகையில் வீண் செலவு செய்து தன்ன...யே காப்பாற்றிக் கொண்டுவரும் அரசைத்தான் ...கோலரசு என்று பொதுப்படையாகக் ...ர்.

...க்கு அளித்துள்ள சட்டதிட்ட உரிமைகளைப் ...டுத்தி, மக்களின் வளத்தை வரிகளால் எவ்வ... உறிஞ்ச முடியுமோ அவ்வளவையும் உறிஞ்சி; ...டு நில்லாமல் மேலும் உறிஞ்சுவதற்கு எப் ...து வாய்ப்பு ஏற்படும் என்று பார்த்துக்கொண் ... விட்டு, மக்களுக்கு ஏதொரு நன்மையும் ... வேண்டுமென்பதில் சிறிதும் அக்கரை காட் ... தன்னல விருப்பத்தை நிறைவேற்றிக்கொண் ...ும் கொடுங்கோலனை, வழிப்பறிக் கொள்ளைக் ...க்கு ஒப்பிட்டுக் காட்டி நமக்குத் தெளிவு பயக் ...ள்ளுவப் பெருந்தகையார்.

...ிப்பறிக் கொள்ளைக்காரன் ஈட்டியைக் கையி...ிக்கொண்டு பெரு வழிகளிலே நிற்கிறான். ...ழியே பொதுமக்கள் வழிப்பயணம் செல்லு...ன். கொள்ளைக்காரன் நின்று இடைமறுக்கிறான். ...யை நீட்டி "உங்களிடமுள்ள பொருள்களை ...ாம் கீழே வைக்கிறீர்களா? இல்லையானால் உங்க...ளையும் கொன்று குவிக்கட்டுமா?" என்று அச்சுறுத்துகிறான். உயிருக்கு அஞ்சும் மக்கள் ...னைப் பேரும், கொண்டு வந்த பொருளையெல்லாம் கொடுத்துவிட்டு வெறுங்கையோடு செல்லுகிறார்கள். அப்படிபட்டக் கொள்ளைக்காரனுக்கும், வரிக் கொடுமை தாங்காமல் வருந்தும் மக்களை மேலும் மேலும் வருத்தி வரிப்பணத்தைப் பிடுங்கிக்கொண்டிருக்கும் ஆளவந்தானுக்கும் வேறுபாடில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். கொள்ளைக்காரன், பொருள் கொடுக்காவிட்டால் ஈட்டியால் குத்துவேன் என்கிறான். ஆளவந்தானோ வரி கொடுக்காவிட்டால், சட்டத்தால் தண்டிப்பேன் என்கிறான். ஈட்டிக்கு அஞ்சி கொள்ளைக்காரனிடம் பணத்தைக் குவிக்கிறார்கள் மக்கள். அதுபோலவே சட்டத்தின் தண்டனைக்கு அஞ்சி வரிப்பணத்தைக் கொடுங்கோலனிடம் கொடுக்கிறார்கள். மக்களுக்குக் கொள்ளைக்காரனால் ஏற்படும் கைமாற்றுப்பலன் உயிரோடு விடுவதைத் தவிர வேறு எதுவுமில்லை. அது போலக்கொடுங்கோலனால் ஏற்படும் கைமாற்றுப் பலன் உயிரோடு விடப்படுவதைத் தவிர வேறுஇல்லை. நாடாளும் கொடுங்கோலன். ஒருவகையில் வழிப்பறி நடத்தும் கொள்ளைக்காரன் ஆவான் என்று வள்ளுவர் கூறிய கருத்தை ஓவியமாகத் தீட்டிக்காட்டியுள்ளார்கள் ஓவிய வல்லுநர் 'பாலு பிரதர்ஸ்'.

வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு (குறள் 552)

வேலொடு நின்றான் - (பெரு வழியின் இடையில் தனியே) வேலேந்தி நின்ற கொள்ளைக்காரன், இடு- (அவ்வழியே செல்லும் வழிப்போக்கரைத் தடுத்து நிறுத்தி அவர்தம் கையிலுள்ள பொருள்களை யெல்லாம்) கொடு, என்றது போலும் - என்று (அச்சுறுத்திக்) கேட்பதை ஒத்துவரும், (எதுவென்றால்) கோலொடு நின்றான் - (ஆணையிட்டுத் தண்டிக்கும் தன்மை வாய்ந்த) சட்டத்தை ஏந்தி இருக்கும் ஆளவந்தான், இரவு-(குடிகளிடம்) வரிப்பொருள் (வேண்டுதல் ஆகும்).

வழிப்பறிக் கொள்ளையடிப்பவனின் மனமும், கொடுங்கோலாட்சி செய்பவனுடைய மனமும் ஒரே தன்மையது என்பது மட்டுமல்லாமல், அவர்கள் இருவரது போக்கும் ஒரு தன்மையது என்பதை வள்ளுவர் தெளிவுபடக் கூறியுள்ளார். இரண்டு பேராலும் துன்பத்தைத் தவிர மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படாது என்பதும் ஆகும். வழிப்பறிக் கொள்ளைக்காரன் எப்படி வெறுக்கப்படுவானோ அப்படியே கொடுங்கோல் மன்னனும் வெறுக்கப்படுவான் குடிமக்களால் என்பதும் பெறப்படும்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

புதன்கிழமை 1-7-53

மரண சாசனம் தீட்டுகிறார்!

ஆச்சாரியார் தனது ஆரம்பக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வந்துவிட்டார்.

புதிய ஆரம்பக் கல்வித்திட்டம் முதலில் சிறிய பஞ்சாயத்து ஊர்களில் மட்டும் கொண்டு வரப்படும் என்று சொல்லியிருந்தார். பள்ளிக்கூடங்களின் ஆரம்பநாள் நெருங்கியதும், பெரிய பஞ்சாயத்துகளிலும் இது நடைமுறைக்கு வரும் என்று சிறு உத்தரவைப் பிறப்பித்துவிட்டார்.

பெரிய காரியங்களனைத்தையும் சிறியதாக்கிக் கூறுவதில் ஆச்சாரியார் பெருமையடைவது வழக்கம். ஆச்சாரியார் சட்டசபைக்குள் நுழைந்தது, மந்திரிசபை அமைத்தது யாவற்றையும் பாருங்கள். குமாரசாமி ராஜா, பக்தவத்சலம், போன்றவர்கள் பொதுத் தேர்தலில் நின்று, ஏராளமாகச் செலவு செய்தும், சட்டசபைக்குள் வர முடியாமற்போன நேரத்தில், ஆச்சாரியார் சிரித்துக் கொண்டே நின்றார். அவர் உள்ளே போவதற்கு இவ்வளவு கஷ்டப்பட்டாரா? கிடையாது. கடைசி நேரத்தில் கவர்னரைச் சந்தித்தார், ஒரு நியமனத்தைப் பெற்றுக்கொண்டு உள்ளே நுழைந்துவிட்டார். பொதுத் தேர்தலில் மண்டையுடையக் கஷ்டப்பட்டவர்களெல்லாம் இந்த மகானுபாவர் செல்லும் கொல்லைவழி கண்டு ஆச்சரியப்பட்டனர்.

"காங்கிரஸ் கட்சிக்குச் சட்டசபையில் போதிய பலம் கிடையாது! இனிக் காங்கிரஸ் மந்திரிசபை அமையாதே!" என்று மற்றவர்கள் பெருமூச்சு விட்ட நேரத்தில், ஆ... யார் மட்டும் சிறு புன்னகையுடன் மேற்... கொண்டு நடக்க வேண்டிய காரியத்தைக் குறுக்கு வழியில் செய்ய ஆரம்பித்தார். மேலி... டத்தைக் கலந்தார்; மாணிக்கவேலரை அழைத்... தார்! செட்டி நாட்டு ராஜாவுக்குக் கண்ணை... காட்டினார்; ராமனாதபுர ராஜாவின் கையைப் பிடித்து மந்திரி சபைக்குள் ஒருவராகச் சேர்த்... துக் கொண்டார். பின் கலப்பட மந்திரிசபை அமைந்தது.

ஆரம்பக் கல்வித் திட்டம், நாட்டுக் கல்வி முறையில் பெரியதொரு மாறுதலைச் செய்ய முனைகிறது. ஆனால் ஆச்சாரியாரோ, முன்னறிவிப்பு எதுவுமின்றி, சட்டசபையிலோ வெளியிலோ எத்தகைய ஆதரவையும் பெறாமல், மிக அவசரத்துடன் இந்தத் திட்டத்தைக் கொல்லை வழியில் அமுலுக்குக் கொண்டுவரப் பாடுபடுகிறார்.

கல்வி முறையில் பெரும் மாறுதல்களைச் செய்ய வல்லத் திட்டம்; சிறு உத்தரவு மூலம் நடத்திவிடப் பார்க்கிறார். இலட்சக்கணக்கான சிறுவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கக் கூடிய திட்டம்; அதைப் பற்றிய அறிவிப்பு வந்த சிறிது காலத்திற்குள், சில நாட்களுக்குள் திட்டத்தைக் கட்டாயப்படுத்துகிறார்.

ஆனால், அவர் எதிர்பார்க்காத அளவுக்கு எதிர்ப்பு எழுந்துள்ளது. "ஜாதீயத்தை வளர்க்கும் திட்டம்," "நடைமுறையில் ப...னளிக்காது" "நாட்டுக்குக்கேடுதரும் திட்ட..." என்றெல்லாம் நமது கழகம் மட்டுமல்ல, வே... அரசியல் கட்சியினரும், கல்வி நிபுணர்களும், பள்ளிக்கூட ஆசிரியர்களும், பஞ்சாயத்து ச...களும், ஜில்லா போர்டுகளும் திட்டத்...கண்டித்துள்ளனர். அது மட்டுமல்ல, காங்கி... கட்சியிலேயே, தமிழ் நாடு காங்கிரஸ் தலை... காமராஜர்; முன்னாள் முதல் மந்திரி ஓமாந்... ரார், இன்னாள் சென்னை மேயர் செங்கல்... யன், முன்னாள் மந்திரி டாக்டர் சுப்பரா... போன்றவர்களும் திட்டத்தை எதி...துள்ளனர்.

மிக மிடுக்குடன் ஆரம்பித்த ஆச்சாரி... இப்பொழுது விளக்கங்கள் தருவதிலும், வி...யானங்கள் செய்வதிலும் ஈடுபட்டிருக்கி... அவருக்கு ஆதரவாகப் பத்திரிக்கைகளில்...வும், பக்கத்திலிருக்கும் மந்திரிகளும் இருக்...

னர்; இவர்கள் வேறு ஏதும் செய்தோ, சிந்தித்தோ அறியாதவர்கள்.

புதிய திட்டத்துக்கு ஆதரவு தேடும் வகையில் கூட்டப்பட்ட கூட்டமொன்றில் "தொழிலுக்கு மதிப்புத் தாருங்கள்" என்று கேட்டுக்கொண்டு, திட்டத்தின் அடிப்படை நோக்கத்தையும், அதற்கு எழுந்துள்ள எதிர்ப்பின் காரணத்தையும் ஆச்சாரியார் மறைக்கப் பார்க்கிறார். முறையான தொழிற் கல்வியை, தொழில் முறைகளை முன்னேறச் செய்து நாட்டின் செல்வநிலையை உயர்த்துவதற்கான திட்டங்களை, யாரும் எதிர்க்கவில்லை.

ஆச்சாரியார் தர நினைப்பது தொழிற் கல்வியை அல்ல, குலத்தொழிலை. நாட்டின் வளம் பெருக வேண்டுமென அவர் பாடுபடவில்லை; இந்த நாட்டில் வர்ணாஸ்ரமம் பாதுகாக்கப்பட வேண்டுமெனத் திட்டமிடுகிறார்! தொழிலின் மேன்மைக்காக அல்ல, ஜாதிய மேன்மையைக் காப்பாற்றப் பாடுபடுகிறார்! ஏழை உழவனின் மகனுக்குத் தொழிற்கல்வி தந்து, விஞ்ஞான அறிவை ஊட்டி, இயந்திர நுட்பங்களைக்காட்டி நல்ல தொழில் நிபுணனாக ஆக்க வேண்டுமென்று அவர் திட்டமிடவில்லை; பள்ளிக்கூடத்திற்குள் தப்பித்தவறி நுழைந்த ஏழைச் சிறுவர்களை மீண்டும் வயலுக்கும், சேற்றுக்கும் அனுப்பப் பார்க்கிறார்!

தொழில் முறைகள் நம் நாட்டில் இன்னும் முன்னேற்றமடையவில்லை. எல்லாம் மிகப் பழைய முறையில், அதிக உழைப்பைக் கொட்டிக் குறைந்த பலனை எடுக்கும் நிலைதான் எங்கும் நிலவுகிறது. தொழில்கள் வளர்ந்து, நாடு வளம் பெற வேண்டுமென்பதில் உண்மையான அக்கறை இருக்குமானால், இருக்கிற தொழில்களில் உள்ள குறைகளை ஆராய்ந்து நீக்கவும், புது முறைகளைத் தேர்ந்து சேர்க்கவும் அரசாங்கம் திட்டமிட வேண்டும். ஆனால் நம் ஆச்சாரியாரின் திட்டம், பிற்போக்கடைந்துள்ள முறைகளைக் காப்பாற்றி, அவற்றில் சிக்கித் தவிக்கும் எண்ணற்ற ஏழை மக்களை அப்படியே ஏழ்மையிலும், பழமையிலும் அழுத்தி வைக்கவே உதவுகிறது.

தொழில்களைப் பரம்பரையாகக் கொண்டு வாழும் வகுப்பினர் அனைவரும் பிற்போக்கு வகுப்பினராகவே இருக்கின்றனர். அவர்களுக்கு உரிமையான, தேவையான அளவுக்குக் கல்வி வசதிகள் கிடைப்பதில்லை. இந்த நிலையில் கிடைத்திருக்கும் ஒரு சில வசதிகளையும் எடுத்துவிட ஆச்சாரியார் வழி பார்க்கிறார். தொழில் முறையில் ஈடுபட்டவரின் சிறுவர்கள் பெரும்பாலாக ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஓரிரண்டு ஆண்டுகளைக் கழித்து விட்டுப்பின் மறுபடியும் தங்கள் வீட்டுத் தொழிலைக் கவனிக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். நம் மாகாணத்து கல்விக் வளர்ச்சியில் ஒவ்வொரு நிலையிலும் காணப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை

பெற்றோரின் தொழில் பற்றி

	உத்தியோகங்களில் இருப்பவர்கள்.	நிலம், தோட்டம், சொத்துடையவர்கள்.
ஆரம்பப் பள்ளி	4,92,766	7,92,467
உயர்நிலைப் பள்ளி	1,86,637	1,74,258
வேறு தனிப்பட்ட பள்ளிகள்	31,958	9,866
கலைக் கல்லூரிகள்	19,160	10,905
தொழிற் கல்லூரிகள்	3,549	1,455
வேறு தனிப்பட்ட துறைகளுக்கான கல்லூரிகள்	403	449

எடுத்து, மாணவர்களின் பெற்றோர்களின் தொழிலைக்கொண்டு பிரித்துப் பார்த்தால், கல்வி நிலை உயர உயர தொழில் புரியும் வகுப்பினரின் சிறுவர்கள் எவ்வாறு குறைந்து கொண்டே போகிறார்கள் என்பது நன்கு விளங்கும். (கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரம் 1949-50-ம் ஆண்டு சென்னை சர்க்கார் கல்வி இலாகா அறிக்கையிலிருந்து எடுக்கப் பட்டதாகும்.)

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களில் மிக அதிகமாகக் காணப்படுபவர்கள், கூலிவேலை செய்து பிழைக்கும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகும். அவர்களின் தொகை 15 லட்சம் 73 ஆயிரமாகும். இவர்களில் பெரும் பகுதியினர் ஆரம்பக் கல்வியின் முழுப் பயனையும் பெற்று, மேற்கொண்டு உயர்நிலைப்பள்ளிக்குச் செல்வதில்லை. ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் படித்து விட்டு, மறுபடியும் தங்கள் குடும்பப் பிழைப்பை நடத்தப் போய்விடுகிறார்கள். இந்தநிலை, ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் இருக்கும் மாணவர்களின் தொகையை உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும். கூலிவேலை செய்து பிழைக்கும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், ஆரம்பப் பள்ளியில் 15 லட்சத்து 72 ஆயிரம் இருந்தார்கள். ஆனால் உயர்நிலைப்பள்ளிக் கணக்கைப் பார்த்தால் அவர்கள் தொகை 61 ஆயிரம் பேர்கள்தான் இருக்கின்றது! அதாவது 15 லட்சம் சிறுவர்களுக்கு மேல் வித்தியாசம் இருக்கிறது. கூலிக்காரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் ஆரம்பப்பள்ளியில் 100 மாணவர்கள் இருந்தால், உயர் நிலைப் பள்ளியில் 4 மாணவர்கள் தான் இருக்கிறார்கள். பாக்கி 96 பேர்கள், கல்வி கற்க முடியாமல் போய்விடுகிறார்கள்.

15 லட்சம் பேர்கள் என்னவானார்கள்? ஏழ்மையின் காரணமாக மறுபடியும் தங்கள் குடும்பத் தொழிலைக் கவனிக்கப் போய்விடுகிறார்கள்.

கைத்தொழில் புரிவோர், அதாவது தச்சு வேலை, கொத்து வேலை, கட்டிட வேலை முதலியவற்றில் ஈடுபட்டிருக்கும் குடும்பங்களில் மாணவர்கள் ஆரம்பப்பள்ளியில் 4 லட்சத்து 86 ஆயிரம் பேர் இருக்கும். உயர் நிலைப்பள்ளியில் 27 ஆயிரம் பேர்கள்தாம் இருக்கின்றனர். 4 லட்சத்து 59 ஆயிரம் பேர்கள் குறைந்து விடுகின்றனர்.

தொழில் புரிவோரின் மக்கள் ஆரம்பப்பள்ளியில் பத்து லட்சம், இருபது லட்சம் என்று லட்சக்கணக்கில் எண்ணப்படுகிறார்கள். உயர் நிலைப்பள்ளிக்கு வரும் பொழுது, முப்பதினாயிரம், அறுபதினாயிரம் என்று ஆயிரக் கணக்கில் எண்ணப்படும் நிலைக்கு வந்து விடுகிறது. கல்லூரிக்குப் போனால் நூற்றுக் கணக்கி

மாணவர்களின் எண்ணிக்கை.

வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள்.	கைத்தொழில் புரிபவர்கள்.	கூலிவேலை செய்பவர்கள்.	மற்றதொழி உடையவர்கள்.
4,49,179	4,86,189	15,72,922	2,16,666
1,02,102	27,482	60,562	46,213
8,721	3,311	18,130	3,731
6,195	960	776	3,531
872	201	571	616
120	100	58	268

..த்தான் எண்ண முடிகிறது. ஆரம்பப்பள்ளி ..ர மேற்பட்ட கல்வி நிலையங்கள் ஒவ்வொன் ..லும், மற்ற வகையில் இருப்பவர்களே, கைத் ..தொழில், கூலி வேலை இவர்களைவிட மேம்பா ..டைந்து காணப்படுகின்றனர்.

..தாரணமாக உத்தியோகம் பார்ப்பவர் ..ன் வீட்டு மாணவர்கள், கலைக் கல்லூரியில் ஆயிரம் பேர் இருக்கிறார்கள், கூலி வேலை ..ப்பவர்களின் மாணவர்கள் 776. விகிதாச் ..ப்படி பார்த்தால் கலைக் கல்லூரியில் இருக் ..மாணவர்களில் நூற்றுக்கு 46 பேர் உத்தி ..கஸ்தர்கள் வீட்டு மணிகள், 2 பேர்தான் ..வேலை செய்பவர்கள் குடும்பங்களைச் சார்ந் ..ர்கள்.

..த்தியோகஸ்தர்கள் பெரும்பாலும் எந்தச் ..தியைச் சேர்ந்தவர்கள் என்று நாம் சொல்ல ..ண்டியதில்லை. ஒன்பது மணியானதும் ..த்தை" விட்டுக் கிளம்பும் ஆராவமுதாச் .., ஒன்பதரை மணிக்கு தன் தலை மயிரை ..த்தியவண்ணம் உல்லாசமாக ஆபீசுக்கு ..துகொண்டிருக்கும் நடராஜ ஐயர், பத்து ..க்கு பாங்குக்குப் போய்க்கொண்டிருக் ..பஞ்சநத சாஸ்திரிகள், பத்தரை மணிக்கு ..சிக்காரர்கள், கட்டுப் புஸ்தகங்களுடன் ..ர்ட்டில் நுழையும் கோபால சர்மா, இப் ..பட்ட "இவாளெல்லாம்" உத்தியோகம் ..க்கும் பரம்பரையினர். மற்றபடி வண்டி ..க்கும் வரதன், குப்பை கூட்டும் சின்னான், ..யுடைக்கும் கந்தன், மூட்டை தூக்கும் ..யன், மரம் அறுக்கும் மாரி, பானை செய் ..பக்கிரி, இவர்களெல்லாம் தொழில் புரிந்து ..ழக்க வேண்டிய "நீச" குலத்தைச் சேர்ந் ..கள்.

..தொழிலுக்கு மேன்மைதர வேண்டும்" .. ஆச்சாரியார் அன்பொழுகப் பேசுகிறார். ..க அமைப்பில் தொழிலுக்கு மேன்மை ..பட்டாதா? நாட்டிலே நிலவும் சாதி பேத ..றுபாடுகளைக் கவனித்தால், தொழில் புரி ..பவர் இழி குலத்தவராக ஆக்கப்பட்டிருப் ..து தெரியும். கல்வி வசதிகள் தொழில் புரி ..வோருக்குக் கிடைப்பதில்லையென்பது முன் ..கத்தில் காட்டப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் ..றும். தொழிலுக்கு மேன்மை வர்ணாஸ்ரம ..ர்மத்தில் தரப்படவில்லை, ஆச்சாரியார் ..கொண்டு வரும் கல்வித் திட்டத்திலும் இல்லை, இரண்டும் தொழில்புரிவோரைத் தாழ்ந்த நிலையில் வைக்கவே பாடுபடுகின்றன.

"தொழிலுக்கு மேன்மை" என்று ஆச்சாரியார் பேசுவதெல்லாம் நம்மிடம்தான். அவருடைய உபதேசமெல்லாம் உழைப்பைத் தவிர வெறெதுவும் தெரியாதவர்களிடம், உழைத்துழைத்து உருக்குலைந்தவர்களிடம், உழைத்தும் பலன் காணாத ஏழையர்களிடம், பகல் முழுவதும் பாடுபட்டும் இரவிலே பட்டினி கிடந்துங்கூடத் தங்கள் பையன்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப முடியாத துர்பாக்கியர்களிடம். "உழைப்புக்கு மேன்மை தர வேண்டும்" என்பதில் ஆச்சாரியாருக்கு நம்பிக்கை இருக்குமானால் அந்த உபதேசத்தை உழைக்காது வாழும் திருக்கூட்டத்தாரிடம் சொல்லியிருக்க வேண்டும், "ஆரிய சிரேஷ்டர்களே! நீங்கள் வேதம் படித்தது போதும், கொஞ்ச நேரம் வேலை செய்யப் பழகுங்கள்; மந்திரம் சொன்னது போதும், போய் மண்வெட்டியை எடுத்து ஒரு வாய்க்கால் வெட்டி வாருங்கள்; உபநிஷத்துக்களை ஆராய்ந்தது போதும், ஊர்த்தெருக்களைக் கூட்டிச் சுத்தம் செய்யுங்கள்." இப்படியெல்லாம் உழைப்பின் மேன்மைபற்றி உழைக்காது வாழும், விதைக்காது அறுக்கும் கூட்டத்தினரிடம் சொல்வதில்லை. சென்னை வேத பாடசாலை விழாவில் கலந்து கொண்டபொழுது வேத பாராயணம் செய்த சிறுவர் சிறுமிகளைப் பார்த்து, "இந்தச் சிறுவர்கள் எழுப்பிய வேத கோஷம் கேட்டு மெய் மறந்தேன், எதிரே வைக்கப்பட்ட ஒலிபெருக்கியைக் கூட எடுத்துவிட்டு, வேதத்தின் கீதம் கேட்டு மகிழ்ந்தேன்" என்றெல்லாம் ஆச்சாரியார் பாராட்டினார். அந்தச் சிறுவர்களிடம் தொழிலின் மேன்மை பற்றி உபதேசிக்கவில்லை. குலத்தொழிலின் அடிப்படையில் கல்வித் திட்டம் அமைந்தால், நம் இனத்தைச் சேர்ந்த சிறுவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று நாம் சொல்லும் பொழுதுதான், தொழிலின் மேன்மை என்று உபதேசிக்கிறார்.

சிறு வயதிலிருந்தே தொழிலிடத்து மக்களுக்கு மதிப்பு ஏற்படாதது போலவும், அதனால் தொழில் செய்வோர் எண்ணிக்கை குறைந்து விட்டது போலவும், அப்படிக் குறைந்து போன நிலையை நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஆச்சாரியாருக்கு ஏற்பட்டுவிட்

டது போலவும், ஆகையினாலே சிறு வயது பையன்களிடத்தில் "தொழிலின் மதிப்பை"த் தொழிலைச் செய்யச் சொல்வதன் மூலம் ஏற்படுத்தி விடுவது போலவும் நினைத்துக் கொண்டு, ஆச்சாரியார் உபதேச மொழிகள் கூறியுள்ளார். ஆனால் நாட்டின் நிலைமை ஆச்சாரியாரின் நினைப்புக்கு நேர்மாறானது என்பதை விளக்குகிறது. தொழிலை மக்கள் புறக்கணிப்பதற்குக் காரணம் உடலுழைப்புத் தொழில்களில் அவர்கள் எதிர்பார்க்கும் ஊதியம் கிடைப்பதில்லை என்பதேயொழிய, அவைகளிடத்து மதிப்பைச் செலுத்தவில்லை என்பதல்ல. உடலுழைப்பினால் கிடைக்கும் ஊதியம், உடலுழைப்பில்லாத தொழில்களில் கிடைக்கும் ஊதியத்தைவிட மிக அதிகமான அளவினது என்றால், அப்பொழுது கைத்தொழிலுக்குத் தானே மதிப்பு உயரத்தான் செய்யும். மேலும் இன்றைய நெருக்கடிக்குக் காரணம் தொழில்கள் செய்ய ஆட்கள் கிடைக்கவில்லை என்பதல்ல; தொழிலறிந்தோர்க்கு வேலைகள் கிடைக்கவில்லை என்பதேயாகும். பொருளாதார சமத்துவம் ஏற்பட்டால் தொழிலுக்கு மதிப்பு தானே வந்துவிடும். அதற்காகக் குழந்தைகளின் கை கால்களை முறிக்கவேண்டிய அவசியம் இல்லை!

குலத்தொழிலைச் சார்ந்த கல்விதான் நல்லது என்று பட்டால், ஆச்சாரியார் வேறொரு திட்டத்தைக்கொண்டுவர வேண்டும். அந்தத் திட்டம் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் அல்ல, உயர்தர தொழிற் கல்லூரிகளில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். தச்சுவேலை, கொல்லுவேலை, கட்டிடம் கட்டுதல், வாய்க்கால் வெட்டுதல் முதலியவை இன்ஜினியரிங் கல்வியுடன் நெருங்கிய தொடர்புடையன. எனவே என்ஜினியரிங் கல்லூரியில், தச்சர், கொல்லர், கொத்தர், மண்வெட்டி இவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் அனுமதிக்கப்பட வேண்டும். அந்தக் கல்லூரியில் கோபாலையர் மகனுக்கோ, வரதாச்சாரி மருமகனுக்கோ இடம் வழங்கக்கூடாது.

அதே போல் மெடிகல் காலேஜில் மருத்துவ குலத்தினர் மட்டும்தான் சேர்க்கப்பட வேண்டும். மனுஸ்மிருதி படிக்கிறவனுக்கு அங்கு இடம் கூடாது.

கால்நடை வைத்தியக் கல்லூரியில் (வெட்னரி காலேஜில்) ஆடுமாடு மேய்ப்போர், இடையர் குலத்தவர் இவர்களுக்கு மட்டுந்தான் இ
முண்டு. ஆகமம் படிக்கவேண்டிய
அங்கே வரக்கூடாது.

தோல் பதனிடும் தொழிற் கல்லூரி (லெ
டெக்னலஜி)யில், ஆடுமாடு அறுப்போர், தோ
பதனிடும் தாழ்ந்த வகுப்பினர் மட்டும்தா
சேர்க்கப்பட வேண்டும். "மாட்டுத் தோலை
தொடுபவன் புலையன்" என்று சாஸ்தி
படிப்பவனுக்கு அங்கு அனுமதிகூடாது.

விவசாயக்கல்லூரியில் உழுது வாழ்பவர்க
தோட்டங்களில் வேலை செய்பவர்கள் குடும்ப
தினர் மட்டுந்தான் பொறுக்கப்படுவார்க
விப்பிர குலத்தவர்கள் அங்கே வந்தா
"வேதம் படிப்பதை விட்டு, விவசாயத் தொ
லுக்கு வருவது தவறு, ஐயன்மீர்!" என்
வணக்கத்துடன் கூறி வழியனுப்ப வேண்டு

குலத் தொழிலுக்கு முதன்மை தருவதெ
றால், ஆச்சாரியார் இந்தத் திட்டத்தைக்
லூரி அனுமதி முறையில் ஏற்படுத்தியிரு
வேண்டும். ஆச்சாரியார் அப்படிச் செ
தில்லை. அங்கெல்லாம் குலத் தொழில், சா
பாகுபாடு, வகுப்பு விகிதாச்சாரம் இவைகளை
பார்ப்பதில்லை. தகுதி, திறமை என்று கூ
100-க்கு 3 விகித முள்ள கூட்டத்தினருக்
கல்லூரிகளில் 100-க்கு 50, 60 என்று இ
கள் கொடுத்து விடுகிறார்.

ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித்திட்டம்
லாதிருந்த காலத்திலே, தொழில் புரிவோர்
மக்களில் சிறு தொகையினரே கல்லூரிக்
நுழைய முடிந்தது. ஆச்சாரியாரின் கு
திட்டம் வந்த பிறகு, இந்தச் சிறு தொ
யினர்கூடக் குறைந்து, உயர்தரக் கல்வி ெ
வோரே உழைப்பாளரில் எவரும் இல்
போய்விடுவார்கள்.

தாழ்ந்து கிடக்கும் வகுப்பினருக்கு இ
கிடைத்துள்ள கல்வி வசதிகள் மிகக் குறை
இந்த நிலையில் ஆச்சாரியாரின் திட்டம் அ
களுக்குக் கிடைத்த சிறிது அளவு கல்வி வ
யையும் பாழ்படுத்துகிறது.

ஆச்சாரியாரின் திட்டம் நாட்டுச் சிற
களின் வாழ்வைக் கெடுக்கிறது. அவர்
டம் ஏழைச் சிறுவர்களின் ஒரே வேளைக்
சியிலும் நஞ்சைக் கலக்கிறது. தகப்ப
கூக்குரல், தாயின் கதறல், குழந்தை

டிப்பு எதையும் கவனிக்க ஆச்சாரியார் மறுக்கிறார்.

விளையும் பயிர்; அதை முளையிலேயே கிள்ளி விட ஆச்சாரியார் முனைந்துவிட்டார்.

ஓடுகின்ற பத்துப் பேரில் ஒன்பது பேரின் காலையும் கட்டிவிட்டு, பத்தாவது பையனை மாத்திரம் ஓடவிட்டு, அவனுக்குப் பரிசு வழங்க ஆச்சாரியார் திட்டம் வகுக்கிறார்.

செடியின் வேரை வெட்டிவிடுகிறார்; மலரப் போகும் மொட்டுகள் மலராதிருக்க ஆகாத திட்டத்தைக் கொண்டு வருகிறார், ஏழைச் சிறுவர்களின் அறிவுக் கண்களை அடைத்து விட.

சூதும் வாதும் நிறைந்த இந்தத் திட்டத்தை எதிர்த்து, நாட்டுச் சிறுவர்களின் நல்வாழ்வைப் பாதுகாக்க அரசியல் கட்சிகள் அனைத்தும், குறிப்பாகக் காங்கிரஸ் திராவிடத் தோழர்களும் போராட வேண்டும். ஆரம்பக் கல்வித் திட்டம் ஒரு அரசியல் திட்டம் அல்லவென்று ஆச்சாரியார் அறிவித்து விட்டார். எனவே, காங்கிரஸ்காரர்கள், அரசியல் காரணமாக வேறுபட்டு நிற்கக்கூடாது. வகுப்புவாரித் திட்டத்தை எதிர்த்து, அல்லாடிகளும், சாஸ்திரிகளும் மல்லாடிய பொழுது திராவிடத் தோழர்கள் அனைவரும் கட்சி பேதமின்றி ஒன்றுபட்டு நின்றனர். வகுப்புவாரி உரிமைக்கு ஏற்பட்டதை விடப் பெரிதான ஆபத்து நாட்டுமக்கள் கல்வி கற்கும் உரிமைக்கே ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆபத்தைப் போக்க நாம் அனைவரும் உறுதியுடன் போராட வேண்டும்.

ஆச்சாரியார் திட்டம் தீட்டி விட்டார், வர்ணாஸ்ரமத்தை நிலை நாட்ட.

ஆச்சாரியார் திட்டம் தீட்டிவிட்டார், நாட்டு மக்களின் நல்வாழ்வைச் சிதைக்க, ஏழை மக்களின் கல்வி நிலையைப் பட்டந்தட்ட. ஆச்சாரியார் திட்டம் தீட்டிவிட்டார். உழைக்கும் பரம்பரையினர் என்றும் வெய்யிலிலே நின்று, வியர்வை வழிய, விலாவெலும்பு ...ாகக் கூலிக்காரர்களாய்ப் பாடுபட்டு மடியட்டும் என்று.

ஆச்சாரியார் தீட்டி விட்டார், நாட்டு மக்களுக்குப் புதியதொரு மரண சாசனத்தை.

ஆபத்து வந்துவிட்டது; அதை நீக்க நாட்டு நலத்தில் ஆர்வங் கொண்டோர் அனைவரும் ஒன்று கூட வேண்டும்!

நரியின் நேசபாவம்

வைக்கோற் போர் மீது இரண்டு கோழிகள் உட்கார்ந்திருந்தன. அந்தப் பக்கம் வந்த நரி அந்த வளர்ந்த கோழிகளைப் பார்த்ததும் நாக்கில் தண்ணீர் சொட்ட ஆரம்பித்தது. கோழிகளை எப்படியாவது கீழே கொண்டுவர வேண்டுமென்று நரி ஒரு யோசனை செய்தது.

பக்கத்தில் போய், கோழிகளைக் கூப்பிட்டு "உங்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன். இன்று காட்டில் ஒரு பெரிய சபை கூடியது. இனி எல்லோரும் நேச பாவத்துடன் வாழ வேண்டுமெனத் தீர்மானித்து விட்டோம். ஆதலால் நீங்கள் பயமில்லாமல் கீழே இறங்கி வாருங்கள் நாமெல்லாம் அன்புடன் ஆடிப்பாடி மகிழலாம்" என்றுகூறி அழைத்தது.

நரியின் சூதான வார்த்தைகளைக் கோழிகள் புரிந்துகொண்டு கீழே இறங்கி வராமல் சுற்றிலும் முற்றிலும் பார்த்தன. "ஏன், என்ன பார்க்கிறீர்கள்?" என்று நரி கேட்டது.

"எங்களுக்குத் தெரிந்த இரண்டு நாய்கள் அதோ வருகின்றன. அவர்களும் வந்து விடட்டும்" என்று கோழிகள் பதிலளித்தன. நாய்கள் என்று கேட்டதும் நரி ஓடத்தயாரானது.

"ஏன் அவசரப்பட்டு போகிறீர்கள்! நீங்கள் சொன்ன தீர்மானப்படி, எல்லா மிருகங்களும் நேசபாவத்துடன் வாழ வேண்டாமா? நாய்களும் வந்துவிட்டால் நாமெல்லாம் நேசத்துடன் ஆடிப்பாடி மகிழலாம்" என்று கோழிகள் கூவியழைத்தன.

"அந்த நாய்கள் பொல்லாதவை. இந்த நேசபாவத் தீர்மானம் அவர்களுக்குத் தெரியாதிருக்கும்" என்று சொல்லிக்கொண்டே நரி ஓடிவிட்டது.

இதைப் போல் நரிக்குணம் படைத்தோர் ஏழை எளியவர்களைப் பார்த்து நேசமென்றும் பாவமென்றும் அன்பொழுகப் பேசுவார்கள். அந்த வார்த்தைகளில் உள்ள சூதைப் புரிந்து கொண்டு, தடுக்க யாராவது வந்தால் "பொல்லாதவர்கள்" என்று அவர்களால் தூற்றப்படுவார்கள்.

(ஆரம்பக் கல்வித் திட்டத்தைப் பற்றி அன்பொழுக ஆச்சாரியார் பேசுவதைப் பற்றி மேலே காட்டப் பட்டக் கதை எழுந்ததல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.)

தையற்கலை

கே. பி. சுந்தரம் G. C. T., T. T. C.

மரப்பொந்துகளிலும் மலைக்குகைகளிலும் படுத்துறங்கி, காய், கனி, கிழங்கு, பச்சை இறைச்சி ஆகியவற்றைப் புசித்து, தழை யுடை அணிந்து, காடுகளில் வேட்டையாடித் திரிந்து வந்த காட்டுமிராண்டி காலத்து மனிதன், இன்றைய நாகரிக நிலைக்கு நகர்ந்துவர இடையிலே எண்ணப்பட்ட எண்ணங்கள், எடுக்கப்பட்ட முயற்சிகள், செய்யப்பட்ட செயல்கள் கணக்கிலடங்கா. அன்று அஞ்சி ஒடுங்கி மலைக்குகையில் ,வாழ்ந்தவன், இன்று அமைதியோடும், மன மகிழ்ச்சியோடும் மாட மாளிகைகளில் வாழ்வு நடத்துகிறான். அன்று புறாவின் காலில் அஞ்சலைக் கட்டி அனுப்பியவன், இன்று ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ளவரோடும் 'தொலைபேசி' (Telephone) யின்மூலம் சொந்தக் குரலிலே பேசிக் கொள்கிறான். அறிவியலின் (விஞ்ஞானத்தின்) துணையால், அகல் விளக்கு மின்சார விளக்காகவும், காடு முரடான பனை ஓலை வழவழப்பான காகிதமாகவும், எழுத்தாணி மையூற்றுப் பேனாவாகவும், தெருக் கூத்து வியப்பைத் தரும் 'தொலை பார்வை' (Television) யாகவும் வளர்ந்து வந்திருக்கின்றன. மனிதனின் அறிவு வளர்ச்சி அவனை ஒவ்வொரு துறையிலும் நீண்ட தொலைவிற்கு இழுத்து வந்துள்ளது. ஆடை அணியும் வகையில் அவன் நகர்ந்து வந்திருக்கும் வழிச்சுவட்டைத் திரும்பிப் பார்த்தால், வியப்பையும், சுவையையும் தரும் நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்திருப்பதைக் காணலாம்.

தையற்கலையை மிகச் சிறந்த முறையில் போற்றி வளர்த்த பழம்பெரும் நாடுகள் தமிழகமும், கிரேக்க நாடும் ஆகும்.

கண்டவுடன் உணர்ச்சிகளைத் தூண்டும் உறுப்புகளை மறைத்து வைக்க வேண்டிய அவசியத்தை யுணர்ந்த ஆரம்பக் காலத்தில், மக்கள் தழைகளைக்கொண்டு மறைக்கத் தலைப்பட்டனர். அடர்ந்து கொத்துக் கொத்தாக இருக்கும தழைகளை, நாரில் தொடுத்துத் தொங்கவிட்டு இடுப்பினைச் சுற்றி உடைய உடுத்திக்கொண்டனர். பிறகு அகன்ற இ களைச் சிறுமுட்கள் கொண்டு பொருத்தினை துத் தைத்து உடையாக அணிந்தனர். கா செல்லச் செல்ல அழகான இலைகளை அ தரும் வகையில் ஒழுங்காகத் தொடுத்து, அ றில் வண்ண மலர்களைச் சொருகி உடுத் கொண்டனர். சிறிது காலம் கழித்து படிப்பட்ட அழகான உடையை இடுப்பு மட்டுமல்லாமல் மேலுக்கும் பயன்படுத்தி ஆண்கள் தோளில் குறுக்கு வாட்டமா போட்டு அழகு செய்து கொண்டனர். பெ கள் உணர்ச்சி யூட்டும் மார்பை மறைக்க மேலிடத்தை அழகுபடுத்தவும் த யுடையை மேலாடையாக உடுத்தினர். சாராரும் தழைகளையும் பூக்களையும் தலைய யாகவும் அணிந்து கொண்டனர்.

ஆடு, மாடு, மான், புலி, யானை போ விலங்குகளின் தோல்களை மிருதுவாகப் ப படுத்தக்கற்றுக்கொண்ட நாளிலிருந்து, த யுடைக்குப் பதிலாகத் தோலாடைகளை ஏ னர். தோல்களில் ஓவியங்களைத் தீட்டி, அவ களுக்குத் தகுந்தாற் போல் மேல் உடுப்புகள வும் அரை யுடுப்புகளாகவும் தைத்துக்கொ னர். பிறகு பருத்தியிலும், பட்டிலும் நூலி நூற்று, நெய்து, ஆடையாக்கிக் கொள் தெரிந்ததும், பருத்தியாடையும், பட்டா யும் நாகரிக வளர்ச்சியின் அறிகுறியாகக்கா யளித்தன. பருத்தியாடையும் பட்டா யுமே இன்று வரை பெரும் வகையில் நி நிலவி வருகின்றன. ரப்பர் ஆடையும், பிள டிக் ஆடையும் கூட நாகரிகத்தின் வளர் யாக இன்றைய நிலையில் மலர்ந்துவிட்டன.

பண்டைக் காலத் தமிழ் மக்கள் இ நெருக்கமும், மென்மையும், மேன்மையும், பும், வேலைப்பாடும் அமைந்த ஆடை வகை உடுத்தி யிருந்தனர் என்பது சங்க இலக்கி களில் நன்கு அறியப்படுகின்றது. பாம் தோலைப் போன்றும், மூங்கிலின் உட்ப உள்ள (ஜவ்வு) தாள் போன்றும் மெ

...ர்ருந்தி, பூக்கள் போடப்பட்டதாக ஆடை ...ளங்கிற்று என்பதைப், "பாம்புரி யன்ன வடி ...ன காம்பின், கழைபடு சோலியின் இழை ...ணி வாரா, ஒண்பூங் கலிங்கம்" (புறம் 383) ...ன்ற அடிகள் உணர்த்துகின்றன. மேலும் "நேர்கரை நுண்ணூற் கலிங்கம்" (புறம் 392) ...ன்றும், "போதுவிரி பகன்றைப் புதுமலரன்ன, ...கன்றுமடி கலிங்கம்" (புறம் 393) என்றும், "திருமலரன்ன புதுமடி" (புறம் 390) என்றும், "புகை விரிந்தன்ன பொங்குதுகில்" என்றும் ...றப்பட்டிருப்பன தமிழகத்தின் பண்டைக் ...ல ஆடைச் சிறப்புக்குச் சான்றுகளாகும்.

தையற்கலையின் சிறப்பு துணிகளை வெட்டு ...லிலும், தைத்தலிலும் அமைந்திருக்கிறது. ...வெட்டுந்திறனும், தைக்குந்திறனும், உடுப்பு ...ளாக ஆக்கிடும் திறனும் காலத்திற்குக் காலம், ...ாட்டிற்கு நாடு, இடத்திற்கு இடம், வளர்ச்சி ...டைந்து கொண்டே வருகின்றன. வளரும் ...றந்த கலைகளில் தையற்கலை ஒன்றாகும்.

"ஆடையில்லாத மனிதன் அரை மனிதன்" ...ன்றும், "உடுப்பு அணிந்தவன் உயர்ந்தவன்" ...ன்றும் வழங்கும் பழமொழிகள் உடுப்புகளின் ...ன்றியமையாமையை நினைவுறுத்துகின்றன.

...தையற்கலையின் அருமையையும், அவசியத் ...யையும் உணர்ந்து, அதனைப் போற்றிக் காப் ...ற்றக் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற ...ர்வம் இப்பொழுது எங்ஙனும் தோன்றி ...ருக்கிறது. தையற்கலை தையல் தொழில் ...ய்வோர் மட்டும் அறிந்திருக்க வேண்டிய ...ன்று என்ற நிலைமாறி, வீட்டிலுள்ள பெண் ...ளும் அறிந்திருந்தால், தமக்கும், தமது குடும் ...்தார்க்கும தம் விருப்பம்போல் உடுப்பு ...ளைத் தைத்துக்கொண்டு பயன்பெறலாம் ...்ற உணர்வு படித்த பெண்டிர்களிடத்திலே ...ாட்களில் தோன்றியுள்ளது. இந்த வகை ... தையற்கலைத் துறையிலே ஒரு நல்ல ...ர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்னலாம்.

...தையல் தொழிலைக் கற்றுக்கொள்ளவேண் ... என்று ஏற்பட்டுள்ள வேட்கையை நிறை ...ற்றிவைக்க, தையற்கலை பற்றிய தனி ஏட்டி ...த் தமிழில் கொண்டு வர சிலர் முயன்றனர். ...துமான ஆதரவு கிட்டாததால் முயற்சி ...வப்போது முறிந்து போயிற்று. காரணம் ...யற்கலையை வளர்க்க வேண்டும், தையற் ... வல்லுநரின் அரிய கருத்துக்களை அறிய ...ண்டும், அவர்களைப் போற்றவேண்டும், என்ற எண்ணம் நல்ல முறையிலே அரும்பா ததேயாகும். மேலை நாட்டில் சென்ற இரு நூறு ஆண்டுக் காலமாகத் தையற்கலையைப் போற்றி வளர்த்து வருகிறார்கள். 18-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தையற்கலை பற்றிய சில சிறுவெளியீடுகள் தோற்றம் எடுத்தன. தையற்கலை வல்லுநரின் ஆராய்ச்சிகள் நாடெங்கும் பரவவும், வளரவும் வாய்ப்பு ஏற்பட்டது. இன்று தையற்கலையை வளர்க்கும் வெளியீடுகளும், நூல்களும் தோன்றியிருப்பது மட்டுமல்லாமல், அதுபற்றிய பள்ளிகளும், கல்லூரிகளும் பல தோன்றியிருக்கின்றன.

/

தமிழகத்தில் சிறந்த தையல் தொழில் வல்லுநர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி நாடு நன்கு அறியவில்லை; அறிய வாய்ப்பில்லை. அவர்கள் எல்லோரும் இலைமறை காயாக, கடலுக்கடி முத்தாக, மாமலை உச்சி மாணிக்கமாக, காட்டின் நடு முல்லையாக இருந்து வருகிறார்கள். இந்த வகையில் முக்கியமான ஒருவரைக் குறிப்பிட வேண்டுமானால் அவர்தான் தோழர் ஆர். எம். சாமிராவ் அவர்கள். அவர் சிறந்த தையற் கலைஞர். சுமார் பதினைந்து ஆண்டு காலத்திற்கு முன்பிருந்தே சுயமரியாதை இயக்கத்தில் நல்ல பற்றுக்கொண்டு தொண்டாற்றி வருபவர். அவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் நன்மதிப்பையும் நட்பையும் பெற்றவர். சிறு வயதிலிருந்தே தையல் தொழிலை வருந்திக் கற்றுக் கொண்டவர். வெட்டவும், தைக்கவும் நன்றாகப் பழகியதோடு, லாகூர் தையற் கல்லூரியில் மூன்றாண்டுகள் பயின்று தேர்வில் வெற்றி பெற்றவர். தாம் பெற்ற கல்வியறிவை பிறர்க்கும் பரப்ப வேண்டும் என்பதில் நல்லார்வம் கொண்டவர். வெள்ளை உள்ளம் படைத்தவர். அவர் 1948-ம் ஆண்டில் "தையற்கலை" என்ற திங்கள் வெளியீடு ஒன்றை வெளிக் கொண்டு வந்தார். ஆதரவின்மையால் ஏற்பட்ட நெருக்கடிகள் ஓராண்டு காலத்திற்குள் அதனை நிறுத்திவிட்டன. அவரால் அறிமுகப்படுத்தப்பட்டவர்களில் தோழர் ஏ. சுகுமார் என்பவர் சிறந்த தையற்கலை வல்லுநராவார். தையற்கலையை வளர்க்க அவர் தம்மாலான தொண்டினைச் செய்து வருகிறார். தையற் கலையைப் பேணும் பண்பு நாட்டு மக்களிடத்தே ஏற்பட்டால் நாடும் நாகரிகம் பெறும்; நாட்டு மக்களின் நலிவும் அந்தத்துறையில் ஓரளவுக்கு நீங்கும்.

(தொடரும்)

புகழொளி பரப்பிய பிளாரென்ஸ்

இருள் மூடிக்கிடந்த ஐரோப்பாவில் பதினைந்தாவது நூற்றாண்டு மத்தியில் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றியது. தானே படித்து அறியும் திறன் பரவியது. மண்டியிட்டுக்கிடந்த மனிதன் எழுந்து நின்று நாற்புறமும் பார்த்தான். அழகிய—இதுவரை அவன் மறந்திருந்த உலகைக் கண்டான். கவிதைகள் உண்டாயின. இனிய இசை பிறந்தது, கண்கவரும் ஓவியங்கள், கருத்தைக் கவரும் சிற்பங்கள் எழுந்தன.

மறுமலர்ச்சி இயக்கம் மகிழ்ச்சிதரும் உலகைக் கண்டது.

ஐரோப்பாவில் பரவிய மறுமலர்ச்சி இயக்கம் முதலில் இத்தாலிய நாட்டில் ஆரம்பமானது. அந்த இயக்கத்தின் உறைவிடமாக, அறிவெனும் கதிரவனுக்கு வரவு கூறும் விடிவெள்ளியாகப் பிளாரென்ஸ் நகரம் விளங்கியது. கவிஞர்கள், கலைஞர்கள், ஓவியர்கள், சிற்பிகள், விஞ்ஞானிகள், அறிவின் தூதர்கள், மறுமலர்ச்சியின் முதல்வர்கள் அந்த நகரத்தில் குழுமியிருந்தனர். அத்தகைய பிளாரென்ஸ் நகரின் சிறப்பும், வரலாறும் பற்றிய விளக்கத்தை இக்கட்டுரையில் காணலாம். (ஆ-ர்)

பதினைந்தாம் நூற்றாண்டு மடலவிழ்த்த போதே ஐரோப்பாவில் குமுறலும், கொந்தளிப்பும் அரும்பத் தொடங்கிவிட்டன. ஐரோப்பாவில் இதுவரை இல்லாத ஒரு 'சலனம்' ஏற்பட்டது. அது, தான், இதுவரை அடைப்பட்டுக் கிடந்த இடத்தை உடைத்துக்கொண்டு கிளம்பியது. பல நூற்றாண்டுகளாகவே ஏழைக் குடியானவர்களை கசக்கிப் பிழியும் நிலமானிய முறையில் அமைக்கப்பட்ட ஒரு சமுதாய, பொருளியல் கட்டுக்கோப்பு, ஐரோப்பாவின் மீது படர்ந்து, அதைத் தனது இரும்புக் கரங்களில் சுருட்டிக் கொண்டிருந்தது. ஆனால் இப்போதோ அது பல இடங்களில் வெடிப்பு விட ஆரம்பித்து விட்டது. கடல் தந்தைகளான கொலம்பஸ், வாஸ்கோடகாமா ஆகியவர்கள் இந்த ஓட்டையை உடைத்துக்கொண்டு சென்றார்கள். ஐரோப்பா தன்னைச் சூழ்ந்துள்ள சிறிய கடல்களுக்கு அப்பால் தனது அகண்ட பார்வையைச் செலுத்தியது! உலகத்தைப் பற்றிய எண்ணங்கள் அதனுடைய சிந்தனையில் விரிந்தன! உலக வாணிபம்-உலக ஆதிக்கம் இவற்றைக் கருக்குழியில் கொண்டிருந்த எதிர்காலம் அதற்கு வழி திறந்தது.

நிலமானியத் திட்டத்தால் ஏழை விவசாயிகள் வேதனை நெருப்பின் சுடர் நாக்குகளிலே பொசுங்கிக் கொண்டிருந்தனர். பெரும் பணம் படைத்த சீமான்களோ மலர் தூவப்பட் மஞ்சத்தில் மயக்கமொழி மங்கையரே சோபன வாழ்வின் சுவைத் தொகுப்புகளை புரட்டிக்கொண்டிருந்தனர். உழைத் உழைத்து உடல் தேயும் ஏழைகளை வறு னும் விஷத்தேள் தனது கொடுக்கால் தீண்டி தீண்டித் துடிக்க வைத்தது. துயரத்தின் ரத்தில் தொங்கவிடப்பட்ட அவர்கள் 15 நூற்றாண்டில் பொறுமையிழந்து கலகம் செ தனர். போர்ப் பூகம்பங்கள் அதிர்ந்த ஐரோப்பாவின் பல பாகங்களிலும் பொரு யல் புரட்சி வெடித்தது!

அதே நேரத்தில் வேறொரு பக்கத்தில் பத்திச் சக்திகள் பெருகின. பொருள் உற் தியில் அதிகமான தொழிலாளர் ஈடுபட்ட வாணிபம் வியக்கத்தக்க முறையில் வளர்ந்த 'பூர்ஷ்வா' வகுப்பு பிறப்பெடுத்தது!

மூன்றாவது முனையில் மதஸ்தாபனம் கப்பட்டது. ஊழல்களின் பிறப்பிடம ஆபாசங்களின் நிலைக்களனாய், ஏமாற் தனத்தின் இருப்பிடமாய், எத்தர்களின் லாச புரியாய், வீணரின் வசீகரச் சோலை மடமையைப் பரப்புவோரின் மகிழ்ச்சி ம கையாய் இலங்கி வந்த மதஸ்தாபனங் எதிர்த்து மதப் புரட்சி உண்டாயிற்று. குருமார்களின் தெய்வீக உரிமைகள் ம

ல் முன்னே வெளுக்கத் தொடங்கின! மத ...தகர்களின் பொய்வேடம் பிய்த்தெறியப் ...டது.

இப்படி ஐரோப்பாவெங்கும் படர்ந்துவந்த ... கொந்தளிப்பிலிருந்தும், வேதனையிலிருந் ... 'மறுமலர்ச்சி' என்ற மணமுள்ள மலர் ...க்குத் தலை நீட்டியது.

கொந்தளிப்பில் முளைத்த மறுமலர்ச்சி மலர் ...ன் முதலில் இத்தாலிய மண்ணில்தான் ...ர்ந்தது-தனது இனிய மணத்தை இத்தாலி ...ங்கும் பரப்பியது! ஆனால் அதற்கு உயிரும், ...மும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ...டைய கிரீசிலிருந்து வந்தன. கிரீசிலிருந்து ... அழகைக் காதலிக்கக் கற்றுக்கொண் ... வடிவழகோடும் அதனினும் ஆழமான ...வழகோடும் சேர்த்து வளப்படுத்தியது. ...ன் உரத்தை உயிராகக் கொண்ட மறு...ர்ச்சியின் உடல் இத்தாலிய மண்ணில் ...ர்ந்தது-வட இத்தாலிய நகரங்களின் நிழ... குடிபுகுந்து வளர்ந்தது! முக்கியமாக ...ரென்ஸ் நகரம் மறுமலர்ச்சியின் தாயக... மிளிர்ந்தது. பிளாரென்ஸ் நகரம் தனது ...புக்கரங்களில் அதை ஏந்திப், பாசத்தோடு ...த்துப் பாதுகாத்தது.

...திமூன்று பதினான்காம் நூற்றாண்டுகளில் ...ரென்ஸ் நகரம் கவிச் செல்வர்களான ...தேயையும் பெட்ரார்க்கையும் உலக மாதா... மடியில் தவழவிட்டது. அவ்விரு அறிவு ...க்குகளிலிருந்து தெறித்து வீழ்ந்த சுடர், ...ரப்பாவை விழுங்கியிருந்த அறியாமை ...ளைக் கிழித்துக்கொண்டு ஒளிவீசி...றது.

...பெட்ரார்க், தணியாத அறிவுத் தாகத்தால் ...ரப்பாவெங்கும் அலைந்து திரிந்தான். ...ைய காலத்து அறிவுப் பொக்கிஷங்களைத் ...த்தேடிச் சலிப்பில்லாமல் நாடு நாடாகப் ...ணம் செய்தான். அறிஞர்களின் கருத்துக்..., வாழ்வைச் செம்மைப்படுத்திக்கொள்ள ...வும் உண்மைகளைத்தாங்கியிருந்த சுவடிகளை ...த்தோடு சேகரித்தான். சேகரித்தவை ...க்குத், தோழர்களின் உதவியைக்கொண்டு ...திகள் எடுத்து, நாடெங்கும் பரப்பி..., ரோம, கிரேக்க இலக்கியங்கள் மக்கள் ...த்தில் விரித்து வைக்கப்பட்டன. சாக்ர..., பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற ...னைச் சிற்பிகளின் சீரிய கருத்துக்கள் மக்களின் சிந்தனைக்கு விருந்தாக்கப்பட்டன. தங்கள்முன் கொட்டிப் பரப்பப்பட்ட ஏடுகளிலிருந்து புதிய எண்ணங்களையும், வாழ்வுக்குப் பயன்படும் அரிய கருத்துக்களையும் தேடி எடுத்து உண்டனர் மக்கள்! இத்தகைய அறிவுப் பணியைச் செய்தான் பெட்ரார்க்.

அவன் சேகரித்துப் பரப்பிய ஏடுகள் மக்கள் எப்படி வாழ வேண்டுமென்று போதித்தன. அந்த ஏடுகளின் மதிப்பு உலகமெங்கும் சென்று பரவியது. மக்கள் மனதில் மண்டியிருந்த இருளைக் கிழித்துக்கொண்டு கல்வியின் ஒளிக்கீற்றுப் பாய்ந்தது. கண்மூடித்தனமாக எதையும் ஒப்புக்கொள்ளும் மனப்பண்பு வாடி, வதங்கி, செத்து வீழ்ந்தது! 'ஆராய்ச்சி மனப்பான்மை' கரை புரண்டது. இத்தகையதோர் விழிப்புணர்ச்சிக்குப் பெட்ரார்க் அஸ்திவாரமிட்டான்.

தாந்தே இத்தாலி நாட்டின் இன்னிசைக் கவிஞன். உள்ள உணர்ச்சிகளை இலக்கியத்தில் புகுத்திக் காட்டியவன். தேன் சிந்தும் சிறந்த கவிதைகளை வடித்தெடுத்தவன்.

தாந்தே மாடிவீட்டு வாசத்தில் வளர்ந்தவன். பணம் படைத்த வர்க்கத்தில் பிறந்ததால் வாலிபப் பருவம்வரை வேதனையின் கொடு நிழல் படாத இன்பப் பகுதிகளைப் புரட்டிக் கொண்டிருந்தான். அதற்குப் பிறகுதான் தொல்லைகள் அலைஅலையாகத் தொடர்ந்தோடி வந்து அவனைத் தழுவின.

தாவியலைந்த தாந்தேயின் காதல் உணர்ச்சிகள் பியாட்ரிக்ஸ் (Beatrics) என்னும் தளிர்க் கொடியாளைத் தழுவின. அந்த அழகு மயில் அவன் உள்ளத்தை ஆடும் அரங்காக்கி விட்டாள். தாந்தேயின் இதயவீணை நாதமெழுப்பியது! காதல் கனி பழுத்தது! அவளது கருவிழிகளிலே வையகத்தின் சோபிதத்தையும், மேனிக் கன்னங்களில் அந்திவானச் சிவப்பையும், பனி உடம்பில் வசந்தகால வனப்பையுங் கண்டான். அந்தச் சிங்காரச் சிட்டும் தாந்தேயின் அறிவொளி வீசும் கண்களில் மயங்கத்தான் செய்தாள். ஆனால்.... தாந்தே எவளோ ஒரு நாடகக்காரியுடன் தொடர்பு கொண்டுத் திரிகிறான் என்ற வதந்தி....பியாட்ரிக்ஸின் உள்ளத்தைப் பிளந்து நெருப்பைப் புகுத்தியது. அவள் மனதில் மூண்டுவிட்ட கசப்புக்கனலைத் தாந்தேயின் பேச்சுகளால் அணைக்க முடியவில்லை. அதன் விளைவாக வேறு

எவனே ஒருவன் தாந்தேயின் இன்பச் சுரங்கத்தைத் தனது சொத்தாக்கிக்கொண்டான்.

இங்கேதான் தாந்தேயின் சோகத் தொடர்கதைக்கு முதல் அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டது. காதலியின் ஏமாற்றம் அவனது இன்ப வாழ்வை இருளடையச் செய்து விட்டது. இழந்த காதல் அவன் நெஞ்சில் சோகத்தைக் குவித்துவிட்டது. அவன் இதயம் கக்கும் பெரு மூச்சுகள் சோக ஒலியை ஒலிபரப்பின. ஏக்கத்தை மறக்க எழுதினான். சோகத்தைத் தணிக்க எழுத்தில் வழி தேடினான். உலகத்திற்குச் சுவையான இலக்கியங்கள் கிடைத்தன.

விடா நியூவா (Vita Neuova) என்ற காவியத்தில் தனது அனுபவத்தையும், தனது உள்ள உணர்ச்சிகளையும் கலந்து, கற்பனையோடு, பியாட்ரிக்சை கதாநாயகியாக உலவ விட்டான். வசந்தம் கொஞ்ச வேண்டிய வாழ்வில் விஷத்தைத் தூவிய இழந்த காதலை அதில் அப்படியே படம் பிடித்தான். காமிடியா (Commedia) என்ற மற்றொரு காவியத்தில் 'நரகம்' என்றொரு பகுதியைப் பிரித்து அதில் தனது இரத்தம் வடியும் இதயத்தைத் திறந்து காட்டினான். இதைத் தீட்டி முடிக்க அவனுக்கு 8 ஆண்டுகள் ஆகியதாம்; தாந்தே நொந்த உள்ளத்தோடு தீட்டிய அந்தக் 'காமிடியா' இன்றும் உலக இலக்கியச் சந்தையில் முதலிடம் வகிக்கிறது. தாந்தேயின் காலத்துக்குப் பின் இத்தாலி இலக்கியச் சோலையில் எத்தனையோ மலர்கள் பூத்துங்கூட இன்றும் காமிடியாவிற்குத் தனி மதிப்பு இருக்கிறது. இத்தாலி நாட்டுக் கலை உள்ளம் படைத்தோர் அதற்கு இப்போதும் மதிப்பு, தந்து வருகிறார்கள்.

காதல் செடி கருகிய பிறகு தாந்தேயின் மனப்போக்கே மாறிவிட்டது. அன்றிலிருந்து காவியங்களைத் தீட்டிக்கொண்டு தன் மனப் போரை அடக்க முனைந்தான். 'அமைதி! அமைதி!' என்று அலைந்து திரிந்தான். கடைசியில், பிளாரன்சில் எழுந்த கலகம் அவன் சொத்துக்களைப் பிடுங்கிக்கொண்டு விரட்டியடித்தது. இத்தாலியில் தாந்தேயின் காலடிச்சுவடுகள் காணப்பட்டால் அவன் எரித்துப் பொசுக்கப்படுவான் என்று அரசாங்கம் அறிக்கை நீட்டியது.

' தனது சொந்தத் தாய் நாட்டில் வாழ வசதியின்றி நாட்டுக்கு நாடு ஓடினான் தாந்தே. இறுதியில் ராவன்னு நகரில் தனது இறு
மூச்சைக் காற்றில் கலந்தான். அவன் க
லறையில் "என் சோந்த மண்ணிலேயே பு
முடியாமல் தடுக்கப்பட்ட தாந்தேயாகிய நா
படுத்திருக்கிறேன்" என்ற எழுத்துக்க
பொறிக்கப்பட்டன.

இவ்விரு இலக்கிய மணிகளை ஈன்ற பி
ரென்ஸ் 15-ம் நூற்றாண்டின் பிற்பகுதியி
மூன்று ஆச்சரிய மனிதர்களை உலகுக்கு அளி
த்தது. லியனார்டோ டாவின்சி — மைக்கே
ஆஞ்சிலோ — ராபெல் ஆகிய மூவரும் பி
ரன்ஸ் மண்ணில் தவழ்ந்தவர்கள். அம்மூ
ரும் பெரிய கலைஞர்கள்! சிறந்த ஓவிய வ
லுநர்கள்!

மைக்கேல் ஆஞ்சிலோ அற்புதமான சிற்ப
சலவைப் பாறைகளைக் குடைந்து அவ
சிருஷ்டித்த பெரிய பெரிய உருவங்களெல்லா
சிற்பக் கலையில் சிறந்த புகழ்முனைகள்! அவ
தொண்ணூறு ஆண்டுகள் வரை வாழ்ந்தா
அவன் தன் இறுதிக்காலம் வரையில் ரோ
புரியிலுள்ள மிகப் பெரிய ஆர்ச். பேதுரு ஆ
யத்தை நிர்மாணிப்பதில் ஈடுபட்டிருந்தா
அவன் உள்ளம் சோகத்தால் சூழப்பட்டிரு
ந்தது. காணும் பொருள்களிலெல்லாம் சி
னையைச் செலுத்தி அதன் உண்மையைக் க
ண்டறிய முயன்றான். அவன் எப்போதும்
தனையில் அமுங்கி இருப்பான். எப்போது
பெரிய பெரிய காரியங்களில் தன்னை ஈடுப
திக் கொள்வது வழக்கம்-விருப்பம்! 'ஓவி
தீட்டுவது தனது தலையைக் கொண்டே த
கைகளைக் கொண்டல்ல' என்று அழக
ஓவியக்கலை குறித்துக் கூறியிருக்கிறான் அவ

பல வழிகளிலும் அற்புதமான மனித
லியனார்டோ. அவன் வாழ்ந்த காலத்
ஐரோப்பிய சரித்திர வானில் பல மேதைகள்
பெயர்கள் நட்சத்திரங்களென மின்னி மி
தன. எனினும் லியனார்டோ அவர்க
சிறந்து விளங்கினான். அவன் சிறந்த ஓவி
திறமையான சிற்பி! முதிர்ந்த அறிஞ
சிறந்த விஞ்ஞானி!

சிறுவனாக இருக்கும்போதே அவன் இ
யிலும், ஓவியத்திலும் தன்னை இழந்தா
அதில் அவனுக்கு ஒருவித வெறி! ஏழா
கள் வரை அவன் அவ்விரு கலைகளிலும்
னைப் புதைத்துக்கொண்டிருந்தான். அவ்
துறைகளிலும் அவன் சிறந்தவனாக வி

ருன். முப்பதாவது வயதில் தானகவே னிதம், லத்தீன் மொழி ஆகியவற்றைக் கற் க்கொண்டான். அவன் அறிவு ஆழமானது! வன் சிந்தனை வானினும் அகன்றது!

ஒவ்வொன்றையும் சோதித்து அதனுள் தைந்து கிடக்கும் உட்பொருளைத் துருவித் ருவி ஆராய்வதில் அவன் எப்போதும் ஈடுபட் ருந்தான். எதையும் தனது ஆராய்ச்சித் ராசில் போட்டு நிறுத்துப் பார்த்தான். ஒவ் வான்றிற்கும் அவன் காரணம் காண முயன் ன். தற்கால விஞ்ஞானத்திற்கு அடிகோலிய பெரும் விஞ்ஞானிகளில் அவனே முதன்மை னவன். "இயற்கை மனிதன் மீதுள்ள ன்பால் உலகில் காணும் ஒவ்வொரு பொரு ளும் ஏதாவதொரு உண்மையை அவன் றிந்துகொள்ளுமா வண்ணம் மறைத்து வைத் ருக்கிறது" என்ருன் அவன்.

மனித உடலின் இரத்த ஓட்டத்தை முதன் தலில் கண்டுபிடித்தவன் அவன்தான். மனித டலின் அருமையான அமைப்பு அவன் இத த்தைப் பெரிதும் கவர்ந்திருந்தது.

"மனித உடல் அருமையானது! அழகு மந்தது! விசித்திரமான பொறிப்புலன்க ளாடு கூடியது! ஒப்புயர்வற்ற இக்கருவியைப் பற தீய குணமும், மந்த மதியும் படைத்த க்கள் ஒரு சிறிதும் தகுதியுடையவர் அல்லர். ன்ணவும், உண்டதை வெளியே தள்ளவும் ரு தோற்பை மட்டும் இருந்து விட்டால் துவே போதுமானது. அவர்கள் வெறும் பைகள்தான்!" என்று மிக அழகாகக் றுகிருன் அவன். மனிதன் என்ருல் நற் ன்புகளும், தெளிந்த அறிவும் உடையவன் ன் என்ற கருத்தை எழில்படக் கூறுகிருன்.

முதன் முதலில் வானில் பறக்க முயன்றவன் வன்தான். ஆனுல் அதில் அவன் வெற்றி பறவில்லை. எனினும் அவன் வெற்றியை ாக்கி நீண்டதூரம் முன்னேறிச் சென்ருன். வனுடைய கொள்கைகளையும், சோதனைகளை ம் வைத்துத்தான் பின்னர் வானில் பறக்க ஞ்ஞானிகள் வழி கண்டனர்.

அரசியல் தந்திரங்கள்-போர்முறை நுணுக் கள்-புதிய போர்க்கருவிகள் செய்தல்-கட்ட க்கலை-இவற்றிலும் அவன் சிறந்த மேதையாக ளங்கினுன்.

பல வியக்கத்தக்கக் குறிப்புகளை அவன் ன் குறிப்பேடுகளில் குறித்து வைத்திருக் கிருன். இவைகளெல்லாம் வெறும் புராணப் புளுகுகளல்ல! மதவாதிகள் கற்பிக்கும் கற்பனை களுமல்ல! அத்தனையும் காரிய சாத்தியமான வைகள்! தான் கூறிய ஒவ்வொன்றையும் செய்து முடிக்கும் ஆற்றலும் தன்னம்பிக்கை யும் கொண்டவன் லியனர்டோ என்பது உலகுக்குத் தெரியும். அவன் குறிப்பிட்டுள்ள போர்க் குறிப்புகள் பலவற்றைப் பண்டைய திராவிடம் அறிந்திருந்தது! லியனர்டோவின் போர்க் குறிப்புகளைப் படிக்கும் போது நமது கண் முன்னுல் புகழொளி பரப்பிய பண்டை திராவிடத்தின் எழிலுருவம் நிழலாடுகிறது!

ஓவியக் கலையிலும் அவன் சிறந்து விளங் கினுன். அவன் தீட்டிய ஓவியங்களெல்லாம் கண்களாகப் போற்றப்பட்டன-பொன்னுக் மதிக்கப்பட்டன! கண்களுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் அழகு ஓவியங்களை அவன் சமைத்தான். இயேசுவின் வாழ்க்கைச் சுவடி யிலிருந்து எடுக்கப்பட்ட 'கடைசி உணவு' என்ற ஓவியம் சிறந்த ஒன்ருகப் புகழப்படு கிறது. இதைத்தீட்ட அவனுக்குப் பல ஆண்டு கள் ஆகியதாம். இது இப்போதும் ஓவியத் துறையில் ஒரு அதிசயமாகக் கருதப்படு கிறது. "மோனலிசா" என்ற பெண்ணர சியின் உருவம் அவனுடைய சித்திரங்களி லேயே அழகுள்ளதாகப் போற்றப்படுகிறது.

அவன் முகத்தில் எப்போதும் சிந்தனைச் சிலந்தி வலைபின்னியபடி இருக்கும். அவன் உள்ளத்தில் எப்போதும் கேள்விகள் வெடித்த வண்ணமிருந்தன. ஆராய்ச்சி மூலம் அவன் அந்த கேள்விகளுக்கு விடைகாண முயன்ருன். வருங்காலத்தை எட்டிப் பிடிக்கும் முயற்சி யில் அவன் தாவித்தாவி முன்னே சென்ருன். அவன் வாழ்வை 'இயற்கையோடு உரை யாடல்' என்று கூறுகின்றனர். 1452க்கும் 1519க்கும் இடைப்பட்ட காலமே அவன் வாழ்நாளை வரையறுத்து நின்றது.

அடுத்துப் பிளாரென்ஸ் உலகுக்கு தந்தது மெக்கியவெல்லி என்ற புகழ் பெற்ற ஆசிரி யனை. 15, 16-ம் நூற்றுண்டுகளில் அவன் ஒரு சாதாரண அரசியல்-வாதியாகத்தான் கருதப் பட்டான். ஆனுல் அவனுடைய 'அரசிளங் குமாரன்' என்ற ஏடு வெளிவந்த பிறகு அவன் பெயர் பிரபலமாகிவிட்டது. அந்த நூலுக்குப் புகழ்மாலைகள் ஓடிவந்து குவிந்த வண்ணமிருந்தன. அக்காலத்தில் வாழ்ந்தி

ருந்த அரசர்கள் — அரசியல்வாதிகள் ஆகியோரது மனோபாவத்தைத்தான் அவன் அந்த ஏட்டில் பிரதிபலித்திருந்தான். அவன் அந்த நூலில் ஓரிடத்தில் கூறுகிறான் "மதம் அரசாங்கத்துக்கு அவசியம் தேவை-ஆனால் மக்களை நற்குணசீலர்களாக மாற்ற அல்ல-மக்களை அடக்கி ஆள." என்று. மற்றொரு இடத்தில் "நல்லவன் போல நடிப்பதால் கிடைக்கும் பலனைப் போல வேறு எதுவும் உலகில் கிடையாது" என்று கூறுகிறான். எத்தனை பெரிய உண்மை! இன்றுகூட ஏகாதிபத்திய வல்லரசுகள் மெக்கியவெல்லியின் மன்னனைப் போலத்தான் நடந்து கொள்கின்றன.

பிளாரென்ஸ் குடியரசின் சரித்திரம் நமக்கு மகிழ்ச்சி தருவதல்ல. நெறிமுறை பிறழ்ந்த கொடுங்கோல் மன்னர்களின் இழி சூழ்ச்சிகள் அந்த சரித்திரச்சீட்டில் கறையைப் பூசியிருக்கின்றன. ஐரோப்பாவின் பணத்தோட்டமாக அது விளங்கியது. கொழுத்த ஐரோப்பிய முதலாளிகள் அங்குதான் கூடுவர். அவர்கள் பணம் படைத்தவர்களே தவிர குணம் படைத்தவர்கள் அல்லர். கொடுமைகளை விதைப்பதில் தனி இன்பம் சுவைப்பவர்கள். பிறர் வாழ்வில் இரத்தத்தைப் பூசுவதில் பூரிப்படைபவர்கள். பணம் படைத்த 'தசைப் பொதிகள்' தான் இப்படி யென்றால் பிளாரென்ஸ் நகர மக்கள் கூட அவர்களைப் போலவே நடந்தனர். அந்த அளவுக்கு அவர்கள் மடமைச் சேற்றில் அமுங்கிக் கிடந்தார்கள். அவர்கள் தங்களிடையே தோன்றிய அறிவுக் களஞ்சியங்களைக் கூடச் சரியாகக் கவனிக்கவில்லை - காப்பாற்றவில்லை! அன்பு காட்டவில்லை என்பது மட்டுமல்ல, அடித்தும் விரட்டினர் அறிவொளி தந்த அறிஞர்களை! பிறந்த தாய்பூமியில் வாழக்கூடாது என்று விரட்டிய அவர்களே தங்களுடைய இரக்கமற்ற செய்கைக்கு வருந்தியபின் வாழ்த்துப்பாடல் இசைத்தனர். இதனாலேயே அந்நகர் "சலனசித்த பிளாரென்ஸ்" என்று வரலாற்றில் அழைக்கப்படுகிறது.

அந்நகர சரித்திர ஏட்டை எடுத்துப் புரட்டினால் நம்முடைய கண் முன்னால் அழகு வழியும் அந்த சிங்கார நகர் எழிலோடு எழுந்து நிற்கிறது. அந்நகரில் கலகலவென்று இன்னிசை முழக்கியபடி தவழ்ந்து செல்லும் ஆர்னோ நதியின் அழகைக் கண்களால் அள்ளிக் குடிக்கும்போது நம் இதயத்தில் இன்ப நீரூற்று சலசலத்தோடுகிறது. அந் உயர்ந்து நிற்கும் மாட மாளிகைகள், கோபுரங்கள் ஆகியவைகள் நம் முன்னே பிரத்தோடு காட்சியளிக்கின்றன. அந் சரித்திரத்தை அலங்கரிக்கும் சிந்தனைச் வர்கள் வரிசையாக நம்முன் வருது ருர்கள். கவிச் செல்வன் தாந்தே கிறான். அவனது இதயச் செடியில் காதல் மலர்களால் அர்ச்சிக்கப்பட்ட அழகு அணங்கு பியாட்ரிக்ஸ் — பின்னே செல்கிறாள். சிந்தனையில் சி வண்ணம் குறுகிய தெருக்களின் வழியே னர்டோ செல்கிறான். இயற்கையின் சியங்களையும், மனித வாழ்வின் மர்மங்க பற்றிய சிந்தனைக் கோடுகள் அவன் முக விரிந்து கொண்டே இருக்கின்றன! இறந்த காலம் மீண்டும் உயிர்ப்பெற்று நம் ஓடுகிறது! அத்தகைய பெருமை வாய் புகழொளி பரப்பிய பிளாரென்ஸ்.

—தில்லை மறைமுத

நமது நன்றி

யாருக்கு உலகம் மிகவும் கடன் பட்டிருக்கிறது?....

அறிவொளி பரப்பிய ஆன் கள், விஞ்ஞானத்தை வளர்த்த ஞர், மண்ணையும் விண்ணை ஆராய்ந்து உண்மைகளைக் க உறுதியாளர்கள், உலகின் அழ யும் இன்பத்தையும் பற்றிப் பா கவிவாணர்கள், கல்லிலே க கண்ட சிற்பிகள், திரையைப் பே செய்த ஓவியர்கள் இவர்களு நாம் நன்றிசெலுத்த வேண்டும்.

அச்சத்தை விரட்டியவர்கள், கா மிராண்டிக் கடவுள்களைத் தூக்கி எ தவர்கள், தளைகளை உடைத்தவர் தூக்குமேடையைத் தம் தூய இ தத்தால் தூய்மைபடுத்தியவர் பகுத்தறிவைப் போதித்தவ ஆகியோர்க்கும் நன்றி செலு கடமைப்பட்டிருக்கிறோம்.

—இங்கர்சா

செய்தித்தாள்

★ ★ ★

அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர்தன்னை மோண்டு

செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்

குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!

நறுமண இதழ்ப் பெண்ணேஉன்
நலம்காணார் ஞாலம் காணார்

ன்று **புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்** அவர்களால் ப்பித்துச் சொல்லப்படும் **செய்தித்தாளின்** ிய பயனைப் போற்றிப் பாராடடாதார் ரும் இருக்கமாட்டார்கள். அன்றாட டமுறை உலகை, நம் மனக்கண் முன்னே விநாடிகளில் கொண்டு வந்து நிறுத்தும் ருப்பணியினைச், 'செய்தித்தாள்' இடை ாது செய்து வருகிறது. அதனுடைய ாற்றத்தையும், வரலாற்றையும் அறிந்து ாள்வது என்பது சுவைதரும் ஒன்றாகும்.

செய்தித்தாள்கள் இப்பொழுது நிலவி ும் அமைப்பிலும், உருவிலும் முதன்முதல் ாற்றங்கொண்டு உலவ ஆரம்பித்தது கி. பி. 6-ம் ஆண்டாகும். அதன் பிறப்பிடம் ்தாலி நாட்டின் வெனிஸ் நகரம். வெனிஸ் அரசாங்கம் மக்களுக்கு அறிவிக்க வேண் செய்திகளையும், மக்கள் அறிந்து கொள்ள ண்டிய செய்திகளையும் தாள்களில் எழுதிப் து இடங்களில் ஒட்டி வைக்குமாம். ஒரு ஜட்டா (Gazetta-இத்தாலியில் வழங்கிய வகை நாணயம்) செலுத்துவோரே அந்தச் ்திதாளைப் படிக்க அனுமதிக்கப்பட்டு னர். இக்காரணம் பற்றித்தான் செய்தித் ள்களுக்கு 'கெஜடஸ்' (Gazettes) என்ற யர் வழங்கலாயிற்று.

அச்சடிக்கும் பொறி (Printing chine) கண்டுபிடிக்கப்பட்டுப் பயனுக்குக் ண்டு வரப்பட்டதிலிருந்து, செய்தித் ள் எழுதுவதற்குப் பதிலாக அச்சடிக்கப் டு ஒட்டப்பட்டு வந்தது. அச்சடிக்கும் முறை வந்த பிறகு ஏராளமான இதழ்கள் தயாரிக்க முடிந்ததால், வெனிஸ் நகரம் மட்டு மல்லாமல், ஐரோப்பாவிலுள்ள பெரியபெரிய நகரங்களுக்கும் அனுப்பப்பட்டன. படிகள் (பிரதிகள்) எடுப்பது என்பது எளிதான செய லாக மாறியதிலிருந்து, ஓரிடத்தில் ஒட்டி வைத்துக் காசு வாங்கிக் கொண்டு காட்ட வேண்டிய முறையைக் கையாளாமல், உரிய தொகையை வாங்கிக்கொண்டு ஒவ்வொரு இதழையும் காசு கொடுப்போர்க்கே கொடுத்து விடுவது என்ற முறை மேற்கொள்ளப் பட்டது.

முதன்முதல் வெளிவந்த ஆங்கிலச் செய்தித் தாள் "வீக்லிநியூஸ்" (Weekly News) என்ப தாகும். அது இலண்டன் மாநகரில் 1622-ம் ஆண்டு துவக்கப்பட்டது. அதில் அறிந்து கொள்ள விரும்பப்படும் வெளிநாட்டுச் செய்தி களை மட்டுமே கொடுப்பது என்ற பழக்கம் 1641-ம் ஆண்டு வரையில் கடைப்பிடிக்கப்பட் டது. அதற்குப் பிறகு உள்நாட்டுச் செய்தி களும் தரப்பட வேண்டியதன் அவசியமும் உணரப்பட்டு நல்ல முறையில் வளர்க்கப் பட்டது.

செய்தித்தாள் என்று இந்த நாட்களில் கருதுவது போன்று இல்லையென்றாலும், இதற்கு ஒப்ப என்று சொல்லக் கூடிய வகை யில், பண்டை நாட்களில் 'செய்தித்தாள்' கள் இருந்திருக்கின்றன. இத்தாலி நாட்டில் ரோம் நகரத்திலிருந்த அரச படைகள் என்ன என்ன செய்கின்றன என்பன பற்றிய செய்தி கள், பேரரசின் பலப்குதிகளிலும், சிதறிக்கிடக் கும் படைத்தலைவர்க்கு அவ்வப்போது அறி விக்கப்பட்டு வந்திருக்கின்றன. படைத் தலைவர்களும் அன்றாட நடவடிக்கைகளை (Daily Doings) மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வந்தனர். பாபிலோனிய நகரத்தி லும், அசிரியன் நகரத்திலும் அரசர்கள்-சண் டைகள் பற்றிய செய்திகளைக் கல்வெட்டில் செதுக்கி வைத்தனர். காரணம் அந்தக் காலத் தவரும், வருங்காலத்தவரும் அச்செய்திகளை அறிய வேண்டும் என்பதற்காகும். பண்டைத் தமிழகத்திலும் ஊர்கள், அரசர்கள், வள்ளல்

கள், புலவர்கள், பழக்க வழக்கங்கள், அரசன் ஆணைகள், ஊர் மன்றங்கள், உடன்படிக்கைகள், வாழ்க்கை முறைகள், போர்கள், வெற்றிகள் பற்றிய பல்வேறு செய்திகளையும் கல்வெட்டுகளில் செதுக்கி வைத்தனர். இறந்தவர்களின் புதைகுழிக்கு மேல் நடுகல் நட்டு அதில் பெயரையும் புகழையும் எழுதுவது பண்டைய மரபாகும். இவை யெல்லாம் செய்தித்தாளின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்த அடிப்படை என்னலாம்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் 'செய்திகளைப்' பரப்பும் முறை, வேறோர் வகையில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. பண்டைத் தமிழகத்தில் சாரணர் என்ற பெயரினர் கூட்டங் கூட்டமாக நாடுநகரங்கள் சுற்றி, ஊர் தோறும் தங்கிச் செல்வர். ஒவ்வொரு ஊரிலிருந்தும் செய்திகளைத் திரட்டிக் கொண்டு வந்து, தங்கும் ஊரிலுள்ளோர்க்குச் சொல்வார்கள், பிறகு அந்த ஊர் பற்றிய செய்திகளை அறிந்துகொண்டு வேறோர் ஊர் செல்வார்கள். இவர்களை அரசரும், வள்ளல்களும், ஊர்ப் பொதுமக்களும் வரவேற்று அன்பு செலுத்துவார்கள்.

செய்தித்தாள் இன்றுள்ள அமைப்போடு சென்ற நானூறு ஆண்டுக் காலமாக வளர்ந்து, இன்றைய நிலையில் உலக அதிசயங்களில் ஒன்று என்று கூறும்படி திகழ்கிறது. இப்பொழுது ஒருமணி நேரத்தில் ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சடிக்கப்பட்டு நூற்றுக் கணக்கான மைல் தொலைவுக்கும் அப்பால் சென்று, ஒவ்வொருவர் கரங்களிலும் தவழும் நிலைக்கு வந்துவிட்டது.

செய்தித்தாள் படிப்போரின் எண்ணிக்கை நமது நாட்டில் மிகமிகக் குறைவு. வறுமை, ஓய்வின்மை, அலட்சியம் எல்லாம் சேர்ந்து கல்வியறிவு அற்றவர்கள் என்று இந்நாட்டில் நூற்றுக்கு எண்பத்தாறு பேரை வைத்திருக்கின்றன. இந்நிலையில் செய்தித்தாள் படிப்போரின் எண்ணிக்கை எவ்வாறு போற்றப்படக்கூடிய அளவுடையதாக இருக்க முடியும்?

செய்தித்தாள்கள் பொதுமக்களின் சிறந்த ஆசிரியர்களாகும். சில நல்ல செய்தித்தாள்களைத் தொடர்ந்து படிக்கிறவனுடைய அறிவு, நூல் நிலையத்தில் பல நூல்களைப் படித்தறிந்து கொண்டிருக்கும் பேரறிஞனைவிட மேலோங்கி நின்று, நாட்டிற்கும் தனக்கும் நலம் பய... தாக இருக்கும்.

விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் இளை... கும், வேதனையில் மூழ்கிக்கிடக்கும் வயோ... னுக்கும்; உழைத்து அலுத்துக் கிடக்கும் ... டாளிக்கும், உல்லாச புரியில் உவகை பூ... நிற்கும் பணக்காரனுக்கும், கல்வியறிவ... னுக்கும் கலைத்துறையில் வல்ல கலைஞனுக்... வேலையற்றோர்க்கும், வேலை பார்ப்போர்க்... பொழுது போக்குவதற்கும், பொலிவு... விளங்குவதற்கும் செய்தித்தாள் அன்ற... தேவைகளில் ஒன்றாகி விட்டது-ஒன்றாக ... டும்! செய்தித்தாளின் அச்சுக்கூடம் ... மக்களின் பல்கலைக்கழகமாகும்! செய்தித்... மக்களின் பேராசிரியராகும்! அதில் ... செய்திகள் அன்றாடப் பாடமாகும்! இ... பல்கலைக் கழகத்தில் பயில்வோர் பாரை ... தோராவர்! அவர்களிலிருந்துதான் ... வெல்வோர் தோன்ற முடியும்! மேலும் ... தித்தாள் கருத்துப் போராட்டத்திற்... சிறந்த கோட்டைக் கொத்தளமாகும்! அ... கருவி நன் முறையில் பயன்படுவதாக!

உலகிலே........

அடர்ந்தவை

மழை - சிரபுஞ்சி (அசாம்)
வெப்பம் - வடமேற்கு சகாரா
குளிர் - வெர்க்கோயான்சிக் (வடகிழக்குச் சைபீரியா, கீழே90 டி...
மக்கள்தொகை - கண்டத்தில் ஆசியா
,, - தீவில் ஜாவா (சதுரமை... 800 பேர்...
உப்புக்கரிப்பு - மரணக் கடல்

ஆழ்ந்தவை

பள்ளத்தாக்கு - மரணப் பள்ளத்தாக்கு (கலிபோர்னி...
கடல் - பசிபிக்
ஏரி - பைக்கல் ஏரி
கடலிடம் - மின்டானேவா தீவுக் கருகில் (பிலிப்பைன்ஸ் - 35,400 ...
நீர்மட்டம் - மரணக் கடல்
எண்ணெய்க் கிணறு - வீக்ஸ் ஐலாண்டு (லூசியானு, அமெரிக்கா, 17,183 ...

விலங்குகள் ஒன்றோடொன்று பேசுமா?

மனிதன் பேசுவதிலே ஆயிரத்திலே ஒரு கு, பதினாயிரத்திலே ஒரு பங்குகூட விலங் ங்கள் எதுவும் பேசுவதில்லை. ஆனால் பல று வகை விலங்குகள் வேறுவழிகளில் தத் து கருத்துக்களைப் பரிமாறிக்கொள் றன.

எடுத்துக்காட்டாக நாயை எடுத்துக் ண்டால், அது தன் குரலின் மூலம் பல று உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துகிறது. ாவது ஆபத்தோ அச்சமோ ஏற்பட்டால் வற்றை உணர்த்த ஒரு மாதிரியாகக் கத்திக் ண்பிக்கிறது; மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் து வாயைப் பிளந்து பிளந்து சிறு ஒலியை ுப்புகிறது; சினம்கொள்ளும் போது உறுமு து; தனியாக இருப்பதை உணர்த்த ஊளை டுக் காண்பிக்கிறது. பசுங்கன்றும், எரு க் கன்றும் பசி ஏற்படும்போது, 'ம்மா' று கத்தித் தாய்க்கு அதனை உணர்த்து றன. குரங்குகள் பலவித உணர்ச்சிகளை வெளிப்படுத்த பலவித குரல்களை எழுப்பு றன.

பன்றியின் உறுமல், குதிரையின் கனைப்பு, ஆட்டின் கத்தல், யானையின் பிளிறல், பசுவின் கதறல், ஓநாயின் ஊளை, குரங்கின் கூச்சல் ஆகியவை பல்வேறு அளவில் வெளிவரும் போது உள்ள உணர்ச்சிகளை எதிரொலிப்பதாக இருக்கின்றன. அச்சப் பற்றி விலங்குகள் எழுப்பும் ஒலியை மிகவிரைவில் அந்தந்த இனத்தால் புரிந்துகொள்ள முடிகிறது.

பூச்சிகளில் பல தமக்குரிய தனி வழிகளில் மிகத் திறமையாகப் பேசிக்கொள்கின்றன. கூடிவாழும் முறையில் வாழ்க்கை நடத்தும் பூச்சிகளான எறும்பு, தேனீ முதலியவைகள் தமக்கென்று சில குறிப்புகள் கொண்டிருக் கின்றன. இல்லையாயின் அவைகள் கூடிவா ழும் கூட்டுமுறை சிறிதளவும் நடைபெறாது. இப்படிப்பட்ட பூச்சிகள் நீண்ட உணர்வு உறுப்பு கொண்டிருக்கின்றன. அதனைக் கொண்டு தொட்டுணர்த்துவதன் மூலம் செய் தியைப் பரிமாறிக்கொள்கின்றன. உணர்ச்சி களை வெளிக்காட்டும் ஒலிகளை ஒழுங்குபடுத்தி ஒழுங்குபடுத்தி மனிதனாகிய விலங்கு மட்டும், நாளடைவில் பேசக் கற்றுக்கொண்டது.

சிறுசெந்நா

சங்க காலத்தில் கண்டீரக்கோப்பெருநள்ளி என்ற மன்னன், வறியோர்க்கு வரையாது ங்கும் வள்ளலாக வாழ்ந்து வந்தான். அவனை அண்டிய புலவர்களும், வறுமையாளர்களும் வைக்கு மேல் பொருள் பெற்றதால், பிற பணமுடையோர் எவரையும் பார்க்கவேண்டிய அவ அவர்களுக்கு ஏற்படாமற் போயிற்று. ஆகவே பெருமையில்லாத பிறமன்னர்களைப் பெருமை போய்கூறிப் பாடவேண்டிய நிலை புலவர்களுக்கு ஏற்படவில்லை.

பெருநள்ளியை அக்காலத்தில் அண்டி வாழ்ந்த புலவர்களில், வன்பரணர் மிகவும் பெருமை ந்தவராவார். அவர், பெருமையில்லாத பிற மன்னர்கள செய்யாதவற்றையெல்லாம் அவர்கள் ததாகக் கூறிப் புகழ்தலைத் தம்முடைய சிறிய செம்மையான நாக்கு ஒருபோழுதும் செய்த ல என்பதை,

> "பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
> செய்யா கூறிக் கிளத்தல்
> எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே" —புறம் 148

சொற்களால் இனிது புலப்படுத்துகிறார். தம்முடைய நாக்கானது பொய் கூறாது என்பதைக் ட 'செந்நா' என்றும், அது தற்புகழ்ச்சியாக இருந்துவிடக் கூடாது என்பதைக் காட்ட 'சிறு நா' என்றும் நயந்தோன்றக் கூறியுள்ளார்.

பெருநள்ளி பணமுடையோனாக மட்டுமல்ல, பண்புடையவனாகவும் இருந்திருக்கிறான் து தெளிவாகிறது.

பாசறைக்காட்சி

சிவகங்கை நகரை யடுத்து விளங்கும் ஏழு பொன்கோட்டை என்ற ஊர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், கோட்டைக் கொத்தளங்கள் அமைந்த அரணுடைய நகராக இருந்தது. பாண்டிய மன்னனின் வீரத்திற்கும், பெருமைக்கும் எடுத்துக்காட்டாக அக்கோட்டை அந்நாளில் விளங்கிற்று. அக்கோட்டை ஏழு திண்ணிய மதில்களையும், காவலுடைய வாயில்களையும் கொண்டு வலுவுடையதொரு வல்லரணாகத் திகழ்ந்தது.

அப்போது சோழநாட்டின் தலைநகரான உறையூரில் சோழன் நலங்கிள்ளி என்பான் சீர் சிறப்போடும், போர் புகழோடும் அரசோச்சி வந்தான். பாண்டிய மன்னனுக்கும் சோழ மன்னனுக்கும் பகை மூண்டது. சோழன் நலங்கிள்ளி சீறியெழுந்தான்; போரிடப் புறப்பட்டான். பாய்ந்தோடும் வெள்ளமெனப் போர்ப் படைகள் திரண்டு சென்று பாண்டியனது ஏழுபொன்கோட்டையை முற்றுகையிட்டது. காட்டரண், நீரரண், மதிலரண் எல்லாம் அழிக்கப்பட்டன. கோட்டைகள் அதிர மாற்றாரின் மண்டைகள் உடைபட, கதவங்களை உடைத்துக்கொண்டு சோழன் படைகள் முன்னேறின. கோட்டையின் உச்சியில் புலிக் கொடியைப் பறக்கவிட்டு, சோழன் பெயர் வாழ்த்தி, வெற்றியொலி முழக்கினர் வீரர்கள். வெற்றியின் அறிகுறியாகக் கோட்டைக் கதவுகளில் புலியின் முத்திரை பொறிக்கப்பட்டது. பாசறையமைத்துப், போர்க்கோலம் பூண்டு மாற்றாரை வென்று, வெற்றி மகிழ்ச்சியோடு வீற்றிருக்கிறான் சோழன் நலங்கிள்ளி.

வெற்றிப் புன்னகையிலே மூழ்கி யிருக்கும் வேந்தனைப்பார்க்க கோவூர்கிழார் என்றபெரும் புலவர் வருகிறார். அவனைப் புகழ்ந்து பாராட்டுகிறார். பாராட்டு மொழிகளின் மூலம் வெற்றி கொண்ட நாட்டின் இயல்பையும், பாசறை அமைத்துக்கொண்ட பாங்கையும், வெற்றி பெற்ற தன்மையையும், வெற்றிகொண்டோனது சிறப்பையும் நமக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார்.

பாண்டிய நாட்டின் காட்டுப் பகுதிகளி
வாழும் வேடர்கள் வேட்டையாடி வயி
வளர்க்கும் பண்பினராக இருக்கின்றன
மான்வேட்டையாடச் செல்லுகிறான்; அவ
டைய வேட்டை நாயும் உடன் செல்லுகிற
நாய் மானை ஓட வொட்டாமற் மட
நிறுத்துகிறது; அதற்குள் வேடன் அம்
அதன்மேற் பாய்ச்சுகிறான்; மான் சாய்கிற
நாய் கவ்வி இழுத்துக்கொண்டு வந்து வேட
டம் ஒப்புவிக்கிறது. மானோடு வீடுதிரு
கிறான். மானிறைச்சியை ஆக்கி வேட்டுவனு
வேட்டுவச்சியும் மற்றுமுள்ளோரும் உ
கிறார்கள். மீதப்பட்ட மானிறைச்சியைப் ப
ஓலைக் கூடையில் வைத்துத் தூக்கிக்கொண்
நகர்ப்புறம் போகிறாள் வேட்டுவச்சி விலைக்
விற்பதற்காக. இடையர் சேரியிலிருந்
இடைச்சி தனது தேவைக்குப் போன
போக மீதமுள்ள தயிரைப் பானையில் சுமந்
கொண்டு அவளும் நகர் நோக்கிப் போகிறா
இருவரும் உழவர் வாழும் பகுதிக்கு வருகி
றனர். அங்கு உழத்தி வெண்ணெல் குவித்
வைத்துக்கொண்டிருக்கிறாள். குளத்தை
யடுத்த கழனிகளில் விளைந்துவந்த வெ
ணெல்லே அவள் கொண்டிருப்பது. உழத்
மானிறைச்சியையும் தயிரையும் பெற்
கொண்டு, அவற்றிற்கீடான நெல்லை ப
ஓலைப் பெட்டியிலும், பானையிலும் நிரப்
கொடுக்கிறாள். வேட்டுவச்சியும், இடைச்சி
மகிழ்ச்சியோடு வீடு திரும்புகின்றனர்.

இப்படிப்பட்ட தன்மையைக் கொண்
பாண்டியநாட்டைச் சேர்ந்த ஏழுபொ
கோட்டையைத்தான், நலங்கிள்ளி வென்
கைப்பற்றினான் என்று கோவூர்கிழ
உணர்த்துகிறார். பாண்டிய நாட்டின்
பகுதி காட்டுவளம், ஆடு—மாட்டுவளம்,
வளம் கொண்டது என்பதைக் குறிப்ப
சொல்லுகிறார். ஆற்றுப் பாய்ச்சல் இல்லா
குளத்துப் பாய்ச்சலை நம்பியே உழவு செ
வேண்டிய பகுதியாகும் என்பதையும் கு
பிடுகிறார்.

ஏழுபொன்கோட்டையைப் பிடித்த சோழ ன்னன் ஆதன் ஏழு மதிற் கதவுகளில் ஏற் னவே பொறிக்கப்பட்டிருந்த மீன் முத்தி ...ய அகற்றிவிட்டு தனது முத்திரையான லியைப் பொறிக்கிறான். அதுவும் வாயைப் ளந்துகொண்டிருக்கும் புலியின் தோற்றம் த்திரையாகப் பொறிக்கப்பட்டது என்று லவர் உணர்த்துகிறார்.

பாணரும், புலவர்கள் பலரும் நலங்கிள்ளி ன் வெற்றிச் சிறப்பைப், பலப்படப் பாடிக் தாண்டு வந்து வந்து போய்க்கொண்டிருக் றார்கள்.

புலவர் நம்மையெல்லாம் பாசறைப் பக்கமும் ழைத்துச் செல்கிறார். பாசறையில் வீதி தியாக வகுத்துப் பாடிவீடுகள் அமைக்கப் ட்டிருக்கின்றன. படை வீரர்கள் அங்கே ழுமியிருக்கின்றனர். அங்கேயே சோறு க்கப்பட்டு வீரர்களுக்குப் படையல் போடப் கின்றது. பாணர்கள் கூட்டங் கூட்டமாக ப்பக்கம் வருகின்றனர். பாசறை அமைத்தி க்கும் அந்த நிலையிலும் இல்லையென்னாது, த்து வருகின்ற பாணர்களுக்குப் பெருஞ் ாற்று உருண்டையைத் தருகிறார்கள். ாற்றுத்திரள் தசைகளோடு பிசையப்பட்டு ய்விட்டு உருட்டப்பட்டதாக இருக்கிறது. ந்தச் சோற்று உருண்டை எப்படியிருக் து என்பதற்குப் புலவர் ஒரு உவமையும் றுகிறார். வாடாத பச்சையிலைகளை இடை டையே தொடுத்த முல்லையரும்பு மாலை லான பூப்பந்து போன்றிருக்கிறது என்று றுகிறார்.

இந்த நாட்களில் 'புலவு' என்று அழைக்கப் ம் உணவைத்தான் புலவர் அவ்வழகிய உவ யால் சுட்டிக் காட்டுகிறார்.

பாசறையின்கண் நலங்கிள்ளி இருக்கும் ாது பாணர்கள் வருவதும் சோற்றுத்திர ப் பெறுவதும், பேர்வதும் ஒரு பெருவிழாப் ான்றிருக்கிறது. அவன் உறையூரின் ாணே இருக்கும்போது கொண்டாடும் சிறு ாற்று விழாவைக் காட்டிலும் இது மிகப் ரிதாக இருக்கிறது என்று கூறிப் புலவர் ப்படைகிறார்.

சிறு சோற்று விழா என்பது சோற்றைக் பிர் முதலியவற்றோடு கலந்து உருண்டை களாக்கி அவற்றை வருவோர் ஒவ்வொருவருக் கும் கொடுத்து மகிழ்வதாகும்.

அச்சிறு சோற்று விழா எப்படி நடை பெறும் என்பதையும் நமக்குக்காட்ட, அங் கும் நம்மை அழைத்துச் செல்கிறார்.

குளிர்ச்சியினை கொட்டிக்கொண்டிருக்கும் இளமரக்கா. கீழே வெண்மணற் பரப்பு. பூத் துக் குலுங்கும் மரங்கள் பூக்களைச் சொரிய, அவற்றின் மணம் அவ்விளமரக்கா முழுவதும் பரவிக்கமழ்கிறது. அன்பினால் பிணைக்கப்பட்ட காதலரும், காதலியரும் இணைந்து நடமாடு கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் அல் லிப்பாவைக் கூத்தில் வரும் பாவைகள் போல் அழகுமிக்கவராக இருக்கின்றனர். அதுவும் கைவல்லுநன் ஒருவனால் புனைந்து செய்யப் பட்டு, அழகாக வண்ணந் தீட்டப்பட்ட பாவை களைப் போல் அவர்கள் காட்சி யளிக்கின்றனர். அந்த இளமரக்காவில் காதலன் காதலியை விட்டோ, காதலி காதலனை விட்டோ தனித்து வர விருப்பப்படுவதில்லை. காவினை ஒட்டிய சாலையிலுள்ள மாடமாளிகை தோறும் செம் மறி ஆட்டுக் கிடாவை வெட்டிக் கறி சமைத் திருக்கிறார்கள். வருவோர் போவோர்க்குக் கறியுஞ்சோறுமாகத் திரட்டிக் கொடுத்துக் கொண்டே யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட விழாவைக் காட்டிலும் பலவகையிலும் சிறப்பு டையதாக இருக்கிறது பாசறையில் நிகழும் நிகழ்ச்சி என்று, நலங்கிள்ளியின் வெற்றிச் சிறப்பையும், வள்ளற் சிறப்பையும், ஈத்து வக்கும் சிறப்பையும் ஒருங்கே கூறி வியப்புறு கிறார் கோவூர்கிழார்.

அவர் பாடிய பாட்டு புறநானூற்றில் இருக் கிறது. அந்தப் பாட்டில் மேலே குறிப்பிட்ட காட்சிகளனைத்தையும் திரட்டி, அழகு தமி ழையும் ஆறாத வளத்தையும் கலந்து தரு கிறார். அந்த முழுப் பாட்டும் கீழே தரப் பட்டிருக்கிறது.

[சினம் பொருந்திய நாயை யுடைய வேட்டு வன் - மானிறைச்சி - பனை ஓலைப் பெட்டி- இடைச்சி - தயிர்ப்பானை - உழவர் - உழத்தி - வெண்நெல்- பண்டமாற்று-பாண்டியன் நாடு ஏழெயில் (ஏழுபொன்கோட்டை) - புலிப் பொறி - பாணர் - படைஞர் - பாசறை - ஊன் சோறு (புலவு) - அரசன் நலங்கிள்ளி - அல் லிப்பாவை - பனிமலர்ச் சோலை - செம்மறி ஆட் டுக் கறி - சிறுசோற்று விழா ஆகிய நிகழ்ச்சி

கனை உள்ளத்தில் காட்சியாக ஆக்கிக் காட்டும் தன்மை, நினைந்து நினைந்து இன்புறவேண்டிய தாகும். பாடல் புறம் 33 ஆகும்.]

கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான்தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பு நிறைய
ஏரின் வாழ்நர் பேரி லரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப வுவந்தனர் பெயரும்
தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவ மெறிந்துகைக் கொண்டுநின்
பேழ்வா யுழுவை பொறிக்கு மாற்றலை
பாடுநர் வஞ்சி பாடப் படையோர்
தாதெரு மறுகிற் பாசறை பொலியப்
புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த
மலரா மாலைப் பந்துகண் டன்ன
ஊன்சோற் றமலை பாண்கடும் பருந்துஞ்
செம்மற் றம்மநின் வெம்முனை யிருக்கை
வல்லோன் தைஇய வரிவனப் புற்ற
அல்லிப் பாவை யாடுவனப் பேய்ப்பக்
காம விருவ ரல்லது யாமத்துத்
தனிமகன் வழங்காப் பனிமலர்க் காவின்
ஒதுக்கின் திணிமணற் புதுப்பூம் பள்ளி
வாயில் மாடந்தொறு மைவிடை வீழ்ப்ப
நீயாங்குக் கொண்ட விழவினும் பலவே

—புலவர் அழகுவேலன்

வரலாற்றில் விரட்டியடிக்கப்பட்ட மன்னர்கள்

		கி. பி
டையோகிளிடியன்	(ரோம்)	305
2-ம் ரிச்சர்டு	(இங்கிலாந்து)	1399
14-ம் லூயி	(பிரான்ஸ்)	1789
4-ம் சார்லஸ்	(ஸ்பெயின்)	1808
நெப்போலியன்	(பிரான்ஸ்)	1814 1815
10-ம் சார்லஸ்	(பிரான்ஸ்)	1830
முதல் இஸபெல்லா	(ஸ்பெயின்)	1870
ஹிஸ்வான்-டங்	(சீனு)	1912
2-ம் நிக்கோலஸ்	(ரஷ்யா)	1917
2-ம் வில்ஹெல்ம்	(ஜெர்மனி)	1918
அல்பான்சோ	(ஸ்பெயின்)	1931
8-ம் எட்வர்டு	(இங்கிலாந்து)	1936
2-ம் கரோல்	(ருமேனியா)	1940
மைகேல்	(ருமேனியா)	1947
தலால்	(ஜோர்டன்)	1952
பருக்	(எகிப்து)	1952

இரண்டு சிற்பங்கள்

—O(0)O—

கிரேக்க நாட்டின் தலைநகரான ஏதென் நகரில் சிற்பி ஒருவன் இருந்தான். அவன் வ தில் இளைஞனுயிருந்தபடியாலும், சிற்பக் க யில் சிறந்தவனென இன்னும் பெயரெடு வில்லையாதலாலும் அவனை யாரும் அதிக பாராட்டுவதில்லை. தன் முழுத் திறமையை காட்டி அழகிய உருவங்கள் பலவற்றை அவ செதுக்கிக் காட்டிய போதிலும், வருகிறவர்க ஏதாவது ஒரு குறை சொல்லிவிட்டுப் போ விடுவார்கள். அவர்களுக்கெல்லாம் தகுந் பாடம் கற்பிக்கவேண்டுமென்று அவனுக்கு தோன்றியது.

பார்ப்பதற்குக் கொஞ்சங்கூட மாறுபா கண்டுபிடிக்க முடியாத விதத்தில், இரண் உருவங்களைச் செய்து முடித்தான். ஒன்ன மறைவாக வைத்து விட்டு, மற்றொன்றை ம டும் எல்லோரிடமும் காட்டி வந்தான். வழ கம் போல் ஒவ்வொருவரும் ஓரோர் குறைை சொன்னுர்கள். அவர்கள் சொல்லுகிறபடி சிற்பி குறைகளைத் திருத்தி வந்தான். குறை ளெல்லாம் முடிந்த பின், திருத்தியமைக்க பட்ட உருவத்தையும், தான் முதலிலே செதுக்கி மறைவாக வைத்திருந்த உருவத்ை யும் எடுத்து, இரண்டையும் நகர் மக்கள் அதி மாக நடமாடும் பொதுவிடம் ஒன்றில் ஒன்று வைத்தான்.

இரண்டு சிற்பங்களையும் கண்ட பொ மக்கள், திருத்தியமைக்கப்பட்ட உருவத்ை குறைகூறியும், சிற்பி மட்டும் தானகச் செய் உருவத்தை மிகுதியாகப் புகழ்ந்தும் பேசி கொண்டார்கள். இவற்றைக் கேட்ட சிற் "குறை கூறிய ஒவ்வொருவரும் கலை நுணு கத்தில் என்னை விடத் தெரிந்தவர்கள் எ எண்ணத்தில் குறை சொன்னர்கள். அவ ருடைய போக்கு தவருனது என்பதை இ இரண்டு சிற்பங்களும் எடுத்துக் காட்டுகி றன" என்று சொன்னன்.

சேரிப்பக்கம்

[கவிஞர் வாணிதாசன்]

வயலினைச் சுற்றிப் பார்த்துத்
திரும்பினேன் ; வளைந்த வாய்க்கால்
அயலுள்ள சேரி மட்டும்
அழைத்துவந் தென்னை விட்டுப்
பெயல்தங்கும் ஏரி நோக்கிப்
பிரிந்தது ; சேரி கண்டேன் !
அயலவர்க் குழைத்துத் தேய்ந்த
அருந்தமிழ் மக்கள் கண்டேன் !

நாட்டினைக் கலையை நாட்டு
மக்களை அர்சை வாழ்வை
ஊட்டியே வளர்க்கும் தோளை
உழைப்பினைக் கண்டேன் ; அன்னோர்
பாட்டினால் கொழுக்கும் செல்வர்
கடுகுள்ளப் பண்ணைச் சேரி
காட்டிற்று ; குடிசைப் பொத்தல்
காட்டிற்றே அரசி னத்தை

ஓடுகள் சாந்த ழைக்க
ஒருபுறம் கிடக்கும் ; வார
ஆடுகள் வேலி யோரம்
அசைபோடும், மேயும் ; நத்தை
ஓடுகள் கும்ப லாக
ஒருபுறம் கிடக்கும் ; வேறு
தேடிதற் குணவு முண்டோ
பணக்காரத் திருடர் நாட்டில் ?

இடிந்துபா ழான கோயில்
இருக்கின்ற சிலைகள் போல
இடிசுவர் மருங்கில் ஓர்சேய்
தூங்கிடும் ; இருக்கும் ஒன்று ;
மடிபிடித் திழுக்கும் ஒன்று ;
வயிற்றினைக் காட்டும் ஒன்று ;
கொடு எனக் கேட்டுத் தாயின்
கோலடி வாங்கும் ஒன்றே !

கடுவெய்யில் கார்க விந்த
நள்ளிருள் தூறல் காற்றுப்
படுவெய்யில் எனப்பா ராது
மற்றவர் பயனுக் காக
இடுவெய்யில் போலு ழைக்கும்
சேரிவாழ் ஏழை மக்கள்
கொடுவெய்யில் குளிர்ம ழைக்குக்
குந்திடக் குடிசை யுண்டோ ?

உணவினைத் திருடி உண்டோர்
உயர்ந்தனர் தமிழ கத்தில் ;
உணவினை விளைப்போர்க் கெல்லாம்
உணவில்லை ; உயர்வும் இல்லை !
உணவன்றோ உயர்வு தாழ்வின்
ஆணிவேர் ; ஏய்ப்போர் வாழ்ந்தார்.
உணவினை உழைப்பை யார்க்கும்
பொதுவாக்க உயரும் வாழ்வே !



வதந்தி

"புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கடை இரண்டு நாளாக மூடிக் கிடக்கிறதே, ஏன்?"

"உனக்குத் தெரியாதா சங்கதி! இப்படித் தனியாக வா, சொல்லுகிறேன். வியாபாரத்தில் ரொம்ப நஷ்டம். கடன் அளவுக்கு மேல் ஏறிவிட்டது. தலையிலே கைவைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டான் அந்தக் கடைக்காரன்".

இது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கடை மூடப்பட்டதற்கு எதிர்க்கடை எல்லப்ப நாடார் தரும் காரணம்.

ஆனால் வெற்றிலைப் பாக்குக்கடை மணி தரும் விளக்கம் வேறு விதமாக இருந்தது.

"கடைக்காரன் நல்ல காய்ச்சலில் படுத்த படுக்கையாயிருக்கிறான். மாடி வீட்டு ஐயா மேலே, இவன் ஒரு மலையாள மாந்திரீகரைக் கொண்டு மந்திரத் தகடு தயாரித்தான். அந்த மந்திரம் இவன் பக்கமே திரும்பி அடித்து விட்டது. நல்ல ஜுரம், சாவானா, பிழைப்பானா என்று கிடக்கிறான்."

சோடாக்கடை சோமலிங்கம் புதிதாக வேறொரு செய்தியைக் கொடுத்தான். "நாலைந்து சின்னப் பையன்களுடன் கூடி, அந்தக் கடையை அவன் ஆரம்பித்தான். இப்போது கூட்டுக்காரர்களுக்குள் சண்டை. ஒரே லடாய். பண்டங்கள் சரியாக விலை போவதில்லை, வியாபாரம் படுத்துவிட்டது. இன்னும் இரண்டு வாரத்திற்குள் கடை ஏலத்துக்கு வந்துவிடும், பாருங்கள்!"

இவைகளெல்லாம் சரியான காரணங்களில்லை என்று பக்கத்திலிருக்கும் பலசரக்குக் கடை பங்காருசாமி சொன்னார். அவர் யாருக்கும் தெரியாததும் எதிர்பார்க்காததுமான புதிய இரகசியத்தைக் கடையைத்தேடி வந்தவனிடம் சொன்னார்.

"உடம்பு எல்லாம் நன்றாய்த்தானிருக்கிறது. அவன் கடை வீதியில் தலைகாட்ட முடியாமலிருப்பதற்கான காரணம் எனக்கு நன்றாகத் தெரியும். இதோ! பாருங்கள். நம்ம ஊரில் பஞ்சாயத்து போர்டு எலெக்ஷன் நடந்ததல்லவா?"

"ஆமாம்."

"அதில் யார் ஜெயித்தது?"

"எதிர்க்கடை எல்லப்ப நாடாரு... சொந்தக்காரன்."

"அந்த எலெக்ஷனில் இவன் என்ன... தான் தெரியுமா?"

"எல்லப்ப நாடாருக்கு எதிராக ... செய்தான். ஓ! இப்போது தெரிகிறது. ... றுப் போன துக்கத்தில், வீட்டுக்குள்ளே... அடங்கி யிருக்கிறான் போலிருக்கிறது."

"துக்கமாவது, வெட்கமாவது. க... நேரத்தில் எல்லப்ப நாடாரிடம் இவன் ப... யிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு, துரோ... செய்து விட்டான்."

"அப்படியா! இருக்காதே!"

"என்ன இருக்காதே! நான் சொல்... நம்பாவிட்டால்கூட, போய் பாருங்கள். ம... கோவிலுக்குப் பக்கத்துச் சந்திலுள்ள ... றில் கொட்டை கொட்டையாக இந்தத் து... கத்தைப் பற்றி எழுதி யிருக்கிறது. ... இவனை நம்பி யார் வருவார்கள்?"

கடை இரண்டு நாளாக மூடப்பட்டி... கிறது. அதற்குக் கடைத் தெருவில் பல... பலவிதமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள்.

ஒரே சம்பவம் நடைபெற்றது. அதற்குப்... விதமான அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்... "நஷ்டம்" என்று எதிர்க்கடை எல்... நாடார் சொல்லுகிறார். "எல்லாம் மந்... தகட்டின் வேலை" என்று வெற்றிலைப் பாக்... கடை மணி கூறுகிறான். "கடைக்குள்... சண்டை" என்று சோடா வியாபாரி சோ... லிங்கம் பிரசாரம் செய்கிறான். "துரோ... செய்தான்" என்று சந்து சுவற்றை ஆதா... காட்டுகிறார், பல சரக்குக்கடை பங்காருசா...

கடைக்காரனைத் தேடி வந்தவனுக்கு இ... நான்கு விதமான பதில்கள் திகைப்பைத்... தன. தன் நண்பனுக்கு ஏதோ ஆபத்து என்... நினைத்தான். கடைசியாக நண்பனுடைய வீ... டுக்கே போன பொழுதுதான் உண்...

ரிந்தது. "வியாபாரம் நன்றாகத்தான் க்கிறது. சண்டை சச்சரவு ஒன்றும் கிடை து. கடையின் அளவைப் பெரிதாக்கி, திகப்பண்டங்களைச் சேர்ப்பதற்காகக் கடை ப் வேலை நடக்கிறது. அதனால் இரண்டு ட்களாக மூடியிருக்கிறது" என்று ரிந்து கொள்கிறான்.

"இதற்குக் கடை வீதியில் ஏதேதோ ன்னார்களே!" என்று அவன் ஆச்சரியப் கிறான்.

"எல்லாம் வதந்தி" என்று கடைக்காரன் ாதானப்படுத்துகிறான்.

* * *

வதந்தி! ஆதாரமற்ற செய்தி, புனைந்துவிடப் ட செய்தி, பெரும்பாலும் உண்மையைத் ாத செய்தி!

வதந்தி பரவுகிறதென்றால் யாரிடமிருந்து ம்பித்தது, எங்குபோய் முடிகிறது என்று ரடுபிடிக்க முடியாது. கடவுளுக்குக் கூறப் ம் இலக்கணத்தைப் போல் வதந்தி ஆதி தியற்றது. அங்கிங்கு எனாதபடி எங்கும் றந்திருப்பது, கருத்துக்கு அப்பாற்பட்டது; ாய்ச்சிக்கு அகப்படாதது, புராணக் கதை ப் போல எது உண்மை என்று சீர்தூக்கிப் க்காமல் அப்படியே நம்பிவிட வேண்டும், பொழுதுதான் வதந்திக்கு மதிப்பு. வதந் கும் ஏராளமான பக்தர்களும், பாதுகாத்து ர்க்க மடங்களும், கச்சேரிகளும் இருக் றன.

ார் இதைச் சொன்னது என்று தெரிவ லை. ஆனால் அது எல்லோராலும் பேசப் ம்.

"இது மிக ரகசியமானது. வேறு யாருக் தெரியாது" என்று ஒவ்வொருவரும் மற் ருவரிடம் சொல்லுவார்கள். கடைசியாகப் த்தால் அது எல்லோருக்கும் தெரிந் க்கும்.

ணிந்த குரலில் வதந்தி கிளம்பும், த்தனியாகச் சொல்லிக் கொள்வார்கள். றல் பறையறைந்து, எல்லோரையும் கூப் டு, உரக்கக்கூவி சொன்னால்கூடத் தெரி க முடியாத அளவுக்கு ஊர் முழுதும் ந்தி பரவிவிடும்.

தந்தி ஒரு மாயாவி, கண்ணுக்குத் தெரி கிருமி, காற்றிலே கலந்துவரும் வாடை. வகையற்றோர் ஓரிருவர் கூடி, ஊர் விவகாரங் களைப்பற்றிப் பரிசீலனை செய்ய ஆரம்பித்துவிட் டால் வதந்தி பிறந்து விடுகிறது. பின் அது கிணற்றருகே, ஆற்றோரத்திலே; குளத்தங் கரை யில், வயற்புறத்தில் வளர ஆரம்பிக்கிறது. சாலையோரத்தில் நடக்கிறது, தோட்டங்களில் உலவுகிறது, சாவடியில் நுழைகிறது, சந் தைக் கடைகளில் ஓடி விளையாடுகிறது. பணக் காரன் வீட்டு விருந்திலே கலந்து கொள்ளு கிறது, ஏழைக் குடிசைகளிலும் சுற்றி வரு கிறது.

இவ்வாறு பல இடங்கள் சுற்றிவந்த போதி லும், ஆரம்பத்திலிருந்து கடைசி வரை ஒரே உருவத்துடனிருப்பதில்லை. மாயாவி என்றால் அடிக்கடி உருவத்தை மாற்றிக் கொண்டிருப் பான் என்று சொல்வார்களே அதைப் போல, வதந்தி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போகுமுன் மாறிவிடும். தங்களிடம் வந்த வற்றில், வேண்டாத பகுதியை நீக்கிவிட்டு விருப்பமான சிலவற்றை அதில் சேர்த்து, புதிய மெருகு கொடுத்துப் பக்கத்திலுள்ளவ ரிடம் ஒவ்வொருவரும் கொடுத்துவிடுகிறார்கள். எனவே பழமை என்று ஆகாமல், என்றும் புதுப்பொலிவுடன் வதந்தி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குச் செல்கிறது.

வதந்தியை உண்டாக்கும் மனப்பான்மை தான் எத்தகையது என்று பார்க்கலாம். புதி தாக ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும் என்ற ஆசை, தனக்கு ஒரு முக்கியமான இரகசியம் தெரிந்து இருக்கிறது என்று காட்டிக்கொள்வதில் ஒரு பெருமை, நிகழப் போவதை முன் கூட்டியே, தெரிவிக்க வேண்டு மென்ற ஆவலில் தானாகவே ஊகிப்பது இவை களினால் வதந்திகள் உண்டாகலாம். சில சம யங்களில் ஒன்றைப் பற்றி ஒருவனுக்கு சில செய்திகள் கிடைத்திருக்கலாம். அதை அவன் மற்றவர்களுக்குச் சொல்லும் பொழுது, அப்படியே ஒப்பிப்பதில்லை. தனக்குப் பிடிக் காத பகுதிகளைக் குறைத்து விட்டு, விருப்ப மான பகுதிகளை மிகைப்படுத்தித் தெரிவிக்க லாம். சில சம்பவங்கள் நடந்தால் நல்லது என்று ஒருவனுக்குத் தோன்றும். அவன் தரு கிற செய்திகளைப் (வதந்திகளைப்) பார்த்தால், அவன் நினைத்தவற்றில் பாதிக்குமேல் நிகழ்ந் ததாகக் காணப்படும். வதந்தியில் அதைப் பரப் புகிறவர்களுடைய விருப்பு வெறுப்புகள் பெரி தும் பிரதிபலிக்கின்றன.

புதிய கடைக்காரன் நஷ்டமடைந்து கடையை மூட வேண்டுமென்பது எல்லப்ப நாடாருடைய விருப்பம். கூட்டுக்காரர்களுக்குள் சண்டை வந்து வியாபாரம் முழுக வேண்டுமென்பது சோடாக் கடைக்காரனின் விருப்பம். துரோகியென்றும் வஞ்சகனென்றும் பொதுமக்களால் புதிய கடைகாரன் தூற்றப்பட வேண்டுமென்பது பலசரக்குக் கடை பங்காருசாமியின் விருப்பம். எனவே இவர்களுடைய விருப்பம் அவர்கள் பரப்புகிற வதந்தியில் உண்மையில்லை யென்பது அவர்களுக்கு நன்ருகத் தெரியும். அதற்காகத் தாங்கள் சொல்வதை நிறுத்திக் கொள்வதில்லை. காரணம் மற்றவர்கள் அதை நம்பினவரையில் தங்களுக்கு லாபந்தானே என்று நினைக்கிருர்கள்.

கடைவீதியில் காணப்படும் வதந்திகள் பொருமைக் காய்ச்சலால் உண்டாகலாம். பத்திரிகைகளில் வரும் வதந்திகள் பெரும்பாலும் காரியக் கண்ணுடனேயே இருக்கும். மத்திய சர்க்காரில் ஒரு மந்திரி வேலை காலி என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே மவுண்ட்ரோடு பத்திரிகையொன்று "மத்திய சர்க்கார் மந்திரிவேலை, அல்லாடி அனந்தராம ஐயருக்குக் கிடைக்குமென்று, விஷயமறிந்த வட்டாரங்களில் பேசிக் கொள்ளுகிருர்கள் என்று நமது புதுடில்லி பிரத்தியேக நிருபர் அறிவிக்கிருர்" என்று எழுதி விடுவார்கள். மத்திய சர்க்காரில் அந்த அனந்தராம ஐயரைப் பற்றிய கவனமே எழுந்திருக்காது. அவருக்கு அந்த மந்திரிப் பதவி கொடுக்கப்படலாம் என்று யாரும் பேசியிருக்கமாட்டார்கள். இருந்தாலும் இந்தப் பத்திரிக்கை "அந்த வேலைக்கு லாயக்காக இப்படிப்பட்ட நம்மவாள் ஒருவர் இருக்கிருர்" என்று கவனத்திற்குக்கொண்டு வந்து, அவருக்கு மந்திரிப் பதவி தரலாம் என்று சிபாரிசு செய்யும் விதத்தில் எழுதும். நாலைந்து பத்திரிக்கைகள் எழுதிவிட்டால், சில சமயங்களில் அவர்களுடைய வாக்கு பலித்து விடுவதுமுண்டு. பெரிய பத்திரிகைகளே இப்படிச் சொல்வதால், அனந்தராம ஐயர்தான் சிறந்தவர் என்று மத்திய சர்க்கார் நம்பி அவரை மந்திரியாக நியமித்துவிடுவார்கள்.

"விஷயமறிந்த வட்டாரங்களில் பேசப்படுகிறது", "நம்பிக்கையான இடத்திலிருந்து வரும் செய்தி", "மிக நெருங்கிய—ஆனுல் பெயரைத் தெரிவிக்க இயலாத ஒருவர் [illegible] யது", "இவ்வாறு உத்திரவு வருமென்று எ[illegible] பார்க்கப்படுகிறது" இவையெல்லாம், [illegible] திரிகையுலகில் வதந்திக்குத் தரப்படும் [illegible] பெயர்கள்.

உண்மை என வேறொன்று காட்டப்ப[illegible] வரையில், வதந்தியை யாரும் மறுக்க [illegible] யாது. அப்படி மறுத்தால் கூட, அதன[illegible] ஒவ்வொன்ருகப் பல வதந்திகள் கிளம்பும்.

சில சமயங்களில் சுலபத்தில் மறுக்க [illegible] யாத வதந்திகள் வரும். உதாரணமாக, ஸ்[illegible] லின் உயிரோடு இருந்த காலத்தில், எந்[illegible] கூட்டங்களிலும் கலந்து கொள்ளாமல் ஒது[illegible] அவர் ஓய்வு பெற்றுக் கொண்டிருந்த [illegible] யங்களில் திடீரென்று ஒரு செய்தி வரு[illegible] "ஸ்டாலின் இறந்து விட்டார். இது ப[illegible] ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது" என்[illegible] சில நாட்களுக்குப் பின் யாராவது ஒரு அ[illegible] யல் தூதுவர் சந்தித்துப் பேசியதாகச் செ[illegible] வரும். அதையும் ஏற்றுக்கொள்ள அ[illegible] வதந்திக்காரர் மறுத்து விடுவார். "இ[illegible] அரசியல் தூதர் சந்தித்தது ஸ்டாலினையல்[illegible] ஸ்டாலினைப்போன்ற வேருெரு போலி ஆச[illegible] யைச் சந்தித்துவிட்டு இவர் தகவல் தந்தி[illegible] கிருர்" என்று மறு வதந்தி வரும்.

இதை யார்தான் பொய் என்று நிரூபி[illegible] முடியும்? ஸ்டாலினே நேரில் வந்து ம[illegible] தால்கூட பலனிருக்காது, போலி ஸ்டாலி[illegible] என ஒதுக்கப்பட்டுவிடுவார்.

அரசியல் செய்திக்காரர்களின் வதந்தி[illegible] ஸ்டாலின் பல தடவை இறந்து பிழைத்தி[illegible] கிருர்.

டி. வி. ஏ (தென்னசி பள்ளத்தாக்கு) தி[illegible] டங்களை உருவாக்கி, சாதாரண மக்களி[illegible] வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ரூஸ்வெல்[illegible] மிகவும் பாடுபட்டார். அவருடைய திட்[illegible] கள் முற்போக்குடையனவாகவும், முதலா[illegible] களைப் பாதிப்பதாகவும் இருந்தன. என[illegible] "அவருக்குச் சித்த சுவாதீனம் இல்லை" என்[illegible] வதந்தி அமெரிக்க முதலாளிமார்கள் கூட்[illegible] களில் அடிக்கடி பேசப்படுமாம்.

இந்தியாவை எடுத்துக்கொண்டால், சுபா[illegible] பாபுவைப் பற்றி எவ்வளவு வதந்திகள் [illegible] துள்ளன. "இன்னும் உயிரோடு இருக்கிருர்", "ஜப்பானில் இருக்கிருர்", "மாஸ்கோவி[illegible]

இருக்கிறார்", "என்னுடன் அவர் கடிதப் போக்குவரத்து வைத்துள்ளார்", "திண்டிவனம் அருகே வயலோரத்தில் பன்னிரண்டு மணியளவில் சுபாஷ் பாபுவைப் பார்த்தார்" என்றெல்லாம் வதந்திகள் வந்தன. அவர் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்று ...ர்ப்பதை விட்டு, அவர் உயிருடன் இருப்பது நல்லதா? அல்லாததா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் முறையில் அந்த வதந்திகளைப் பற்றி வாதங்கள் எழுந்தன.

பல்வேறு நாட்டு வரலாறுகளைப் படிக்கும் பொழுது, வதந்திகள் பல முக்கியமான கட்டங்களில் வரலாற்றை மாற்றியமைத்திருக்கின்றன என்று தெரியும்.

ரோம் வல்லரசு பலமடைந்திருந்த நிலையில், ரோம் நகரில் வதந்தி பேசுவோர் ஏராளமாக இருந்தனர். அரச சபையில் நடக்கும் ஆர்பாட்டங்கள் அரண்மனையில் நடக்கும் கோலாகலங்கள், அந்தப்புரத்தில் நடக்கும் லீலா விநோதங்கள், அரியாசனத்தைச் சூழ்ந்து நடந்த ...த் திட்டங்கள், இவை அனைத்தும் வதந்திக்கு வளந் தருபவைகளாக இருந்தன. முன்பு குறிப்பிட்டபடி, வதந்திகள் அவற்றைப் பேசும் மக்களின் மனப் போக்கை வெளிப்படுத்துவதாக இருந்ததால், நகர மக்களிடையே இத்தகைய வதந்திகள் உலவுகின்றன என்று அறிந்து வர, டிலேட்டர்கள் என்ற வதந்தி ஒற்றர்கள் ரோம் மன்னர்களால் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களுடைய வேலை உருமாறி, ...து மக்களுடன் கலந்து, அவர்கள் பேசும் வதந்திகளை அரண்மனையில் வந்து சொல்வதாகும். நாளடைவில் இந்த வதந்தி ஒற்றர்கள், மன்னனுக்கு எதிராக வதந்திகள் கிளம்பினால், அவற்றை மறைத்து மன்னனுக்குச் சாதகமான வதந்திகளைப் பரப்புவதற்குப் பயன்படுத்தப்பட்டனர்.

ரோம் நகரில் பெரும் தீ மூண்டு, நகரின் பகுதிகளை அழித்துவிட்டது. அப்பொழுது நீரோ என்ற மன்னன் ஆண்டு வந்தான். ரோம்நகர் பற்றி எரியும்பொழுது அவன் பிடிலை மீட்டிக் களிப்படைந்தான் என்ற வதந்தி ரோம் நகரில் சில இடங்களில் உண்டாயிற்று. இதை எதிர்த்து, நீரோ தன் வதந்தி ஒற்றர்கள் மூலம் கிருஸ்தவ அடிமைகள்தாம் ரோம் நகருக்குத் தீ வைத்தனர் என்ற வதந்தியைப் பரவச் செய்தான்.

மக்கள் பலர் இதை உடனே நம்பிவிட்டனர். "இருக்கலாம், இந்தப்புதிய மதத்தினர் மூலை முடுக்குகளில் தனியாகக் கூடிப் பேசுகின்றனர். ஏதோ சதி செய்து, நகருக்குத் தீ வைத்துவிட்டனர்" என்று ரோம் நகர மக்கள் பேசிக்கொண்டனர். அவர்களின் ஆத்திரம் அடிமைகளின் மீது பாய்ந்தது. அடிமைகளுக்கு மன்னன் தந்த கடும் தண்டனைகளை நியாயமானவை என ஆதரித்தனர். அடிமைகள் படும் அவதிகண்டு ஆரவாரித்தனர்.

இந்தநிலை வெகுநாளைக்கு நீடிக்கவில்லை.

நீரோவின் கொடுங்கோன்மை அதிகரித்ததும், பொதுமக்கள் அவனை வெறுக்கத் தலைப்பட்டனர். அவனுக்கு எதிரான வதந்திகள் கிளம்பின. தான் பாட்டுப்பாடி மனங்களிப்பதற்காகவே நீரோ ரோம் நகருக்குத் தீ வைத்தான் என்று பலரும் பேசிக்கொண்டனர். இதற்கு உறுதியான ஆதாரங்களில்லையென்றாலும், நீரோ கல்மனம் படைத்த கொடுங்கோலன் ஆதலின், **செய்திருக்கக் கூடும்** என்ற எண்ணம், அவன்தான் **செய்தான்** என்ற முடிவைத் தந்துவிட்டது.

சண்டைக்காலங்களில் வதந்திகள் பேராபத்தை விளைவிக்கத்தக்கன. யுத்த களத்தில் ஏற்படுகிற சிறு வதந்தி சண்டையின் முடிவையே மாற்றி, ஒரு சாம்ராஜ்யத்தின் எதிர்காலத்தையே பாதிப்பதாக அமையலாம்.

கண்டோர் வியக்கும் தாஜ்மகாலையும், கண்கவர் சித்திரக் கூடங்களையும், பளிங்கு மாடங்களையும் நிருவி, வட இந்தியாவில் பரந்த சாம்ராஜ்யத்தின் அதிபதியாக மொகலாய மன்னன் ஷாஜகான் விளங்கினான். அவனுக்குத் தாரா, ஷுஜா, ஔரங்கசீப், மூராத் என்ற நான்கு குமாரர்கள் இருந்தனர். ஷாஜகான் நோய்வாய்ப்பட்டுத்தளர்ந்த நிலையில், பட்டங்குறித்து அரச குமாரர்களுக்குள் சண்டை மூண்டது. வழக்கப்படி மூத்த மகனான தாராவுக்குத்தான் பட்டங் கிடைக்கவேண்டும். ஆனால் ஒவ்வொரு இளவரசனும் தன்னால் முடிந்தவரை துணையைத் தேடி, படைகளைத் திரட்டிப் போராடினார்கள்.

தாராவுக்கும், ஔரங்கசீபுக்கும் சமுகாரா என்ற இடத்தில் 1658-ல் கடும்போர் நடந்தது. ஔரங்கசீபின் படை வீரர்கள் பலமாகத் தாக்கினார்கள். தாராவின் படை

ன் அணிகுலையாமல் வீரமாகப் போராடி
னர்கள். வெற்றி, தோல்வி எந்தப் பக்கம்
ன்று கூற முடியாமல் இருந்தது. படை
ணிவகுப்பின் மத்தியில் ஒரு யானையின்
து அமர்ந்து, தாரா போரை முன்
ன்று நடத்தினான். கடுமையாகப் போர்
டக்கும் வேளையில், தாரா வேறொரு யானை
து மாறிக்கொள்வதற்காக தான் ஏறி இருந்த
னையிலிருந்து கீழே இறங்கினான். யானை
து அரச குமாரனைக் காணாததும், "தாரா
றந்துவிட்டார்" என்ற வதந்தி அவன்
டைவரிசைகளில் பரவி, போர்வீரர்கள் பின்
ங்க ஆரம்பித்துக் கலையத் தொடங்கிவிட்
னர். ஔரங்கசீபு படையினர் இந்தச் சம
த்தில் முன்னேறித் தாக்கத் தலைப்பட்டனர்.
ாரா எவ்வளவு முயன்றும் சிதறியோடும் தன்
டை வீரர்களை ஒன்று சேர்க்க முடியவில்லை.
ாதரவாக விடப்பட்ட தாரா மீண்டும் படை
டன் ஔரங்கசீபை மற்றொரு இடத்தில்
திர்த்து நின்றான். அப்பொழுதும் முற்றி
ும் தோற்கடிக்கப்பட்டு, ஔரங்கசீப்பால்
கதியாக்கப்பட்டான். எந்தத் தலைநகர் வீதி
ளில் அரசிளங் குமாரனாக யானை மீது பவனி
ந்தானோ அதே வீதிகளில் தாரா கைதியாக
லங்கிடப்பட்டு நடத்திச் செல்லப்பட்டான்
ன்று வரலாறு கூறுகிறது.

சிறு தவறு, அதனால் ஏற்பட்ட வதந்தி ஒரு
ாரின் முடிவை மாற்றி, அவனது மணி மகு
த்தைப் பறித்து, அவனுடைய உயிருக்கே
டிவு தேடிவிட்டது.

அறிவியல் துறையில் வதந்தி பல கேடுகளைச்
செய்திருக்கிறது. கிரேக்க நாட்டுத் தத்துவ
ானியான சாக்ரடீஸ் மீது குற்றஞ் சாட்டி
து வதந்திதான். ஏதன்ஸ் நகர இளைஞர்கள்
லரின் மனதை அவர் கெடுத்து வருகிறார்,
ன்ற வதந்தி சிறுகச் சிறுக வளர்ந்து, அதை
தலாக வைத்து சாக்ரடீஸ் மீது வழக்குத்
ாடுத்தனர். வழக்கின்போது கூட ஆதார
வமாக, நிரூபிக்கத் தக்கச் சான்றுகள் அவ
க்கு எதிராக காண்பிக்கப்படவில்லை. ஒவ்
வொருவரும் கேள்விப்பட்ட வதந்திகளே மேற்
ாள்களாகக் காட்டப்பட்டன. கடைசி
க உலகங் கண்ட சிறந்த தத்துவஞானி,
ரக்க நாட்டு மூதறிஞர், விஷங் குடித்து
றக்க வேண்டுமெனத் தண்டிக்கப்பட்டார்.

நாட்டுக்கு உழைத்த அந்த நல்லவருக்கு சாவைக் கொடுத்தது வதந்தியேயாகும்.

போப்பாண்டவர்களின் ஆதிக்கம் வலுத்து, ஐரோப்பா அவர்களின் ஆணையின் கீழ்க் கட்டுப்பட்டிருந்த காலத்தில், கிருஸ்தவ மதத்திற்குப் பாதகமாக எவரேனும் இருப்பதாகக் கருதப்பட்டால் உடனே அவர்கள் "இன்க்யுசிஷன்" என்று அழைக்கப்படும் மதச்சபையால் விசாரிக்கப்பட்டு, கடுந்தண்டனைகள் தரப்பட்டனர். போப்பின் ஏற்பாட்டை ஒத்துக்கொள்ளாதவன், பாவ மன்னிப்புச் சீட்டை எதிர்ப்பவன், விஞ்ஞானத்தைப் படிப்பவன், வேத புத்தகத்தைப் பாராதவன், உலகம் உருண்டை என்று கூறுபவன், குருமாரைப் பரிகசித்துப் பேசியவன் என்று எவர் மீதேனும் இரண்டு பேர் வதந்தி கிளப்பிவிட்டால் போதும். உடனே "இன்க்யுசிஷன்" அவர்களைக் கைது செய்து, இருட்டறைக்கோ, நெருப்புக் குண்டத்துக்கோ அனுப்பிவிடும்.

வதந்தி பல நூல்களைப் "பாப ஏடுகள்" எனப் பறிமுதல் செய்திருக்கிறது; விவேகிகள் கைகளில் விலங்குகளை மாட்டியிருக்கிறது; அறிவொளி கண்டவர்களை "நாட்டின் அழிவு வேலையினர்" என இருட்டறைகளில் அடைத்திருக்கிறது; விஞ்ஞானிகளை "சைத்தானின் பிரதிநிதிகள்" என்றுகூறிக்கொடுமைப்படுத்தியிருக்கிறது; நெஞ்சுரங் கொண்டோரை, நேர்மைத் திறன் படைத்தோரை தீக்குண்டங்களில் நீராக்கியிருக்கிறது. வதந்தியின் சத்தத்தை எதிர்த்து இந்த நல்லோர்களால் பேச முடியவில்லை. அவர்கள் ஆராய்ச்சி முறையில் நம்பிக்கையுள்ளவர்கள், வதந்தியோ ஆராய்ச்சித்திறனில்லாத இடத்தில் கிளம்பியது!

அறியாமை மிகுந்து, ஆராய்ச்சித் திறன் அற்ற இடத்தில் வதந்தி உருவாகிறது. அதற்குச் சோம்பல்வாழ்வும் தாழ்ந்த எண்ணங்களும் துணை செய்கின்றன. வதந்தியைக் கேட்பவர்கள் அதைமேலும் பரப்பினால், சமூகத்தில் காணப்படும் இந்தக்குறைகளை வளர்ப்பதாகவே ஆகும். சமூக வாழ்வில் வீண் வதந்தி பரவுவது, அழகிய மலரில் புழு நெளிவதைப் போன்றது. கண்ட இடத்தில் அதை அகற்ற வேண்டும்.

— இரா. செழியன்

தி. ஆ. மாவட்ட தி. மு. க.
2-வது
மூக சீர்திருத்த - அரசியல்
மாநாடுகள்

ஜூலை 4, 5, சனி, ஞாயிறு நாட்களில்
சிதம்பரம் தில்லை டாக்கீஸ்
பின்புறத் திடலில் அமைந்துள்ள
கைவல்யனார் பந்தலில் — மஜீத் அரங்கில்
முறையே நடைபெறும்.

முதல் நாள்
தலைவர்:— க. அன்பழகன் எம். ஏ.
துவக்குபவர்:—சி. வி. எம். அண்ணாமலை

இரண்டாம் நாள்
தலைவர்:— சி. பி. சிற்றரசு
துவக்குபவர்:—இராம. அரங்கண்ணல்
கலைக்கண்காட்சித் திறப்பாளர்:—
எம். ஜி. ராமச்சந்திரன்

இரண்டு நாட்களிலும் அறிஞர் அண்ணா ர்களும், கழக முன்னணிச் சொற்பொழி வாளர்களும், நடிகர்களும், இசைவாணர் களும் கலந்து கொள்வர்.

ாதல் ஜோதி" "சந்திரோதயம்"
ிய இரு நாடகங்களும் இரண்டு நாட்களில் நடைபெறும்.

கட்டணங்கள் இரண்டு நாட்களுக்கு:
ேவற்பாளர் ரூ. 5 பிரதிநிதி ரூ. 3.
வையாளர் ரூ. 1. பெண்கள் அணா 8.

ில்லை வில்லாளன்,
இரா. சக்கரவர்த்தி
செயலாளர்கள்.

ஆர். பாலகுருசாமி
வ. கு. தலைவர்.

"மன்றம்" கட்டண விபரம்

	உள்நாடு	வெளிநாடு
டுக் கட்டணம்	6—0—0	7—8—0
மாதம் ,, ,,	3—0—0	3—12—0
இதழ் ,, ,,	0—4—0	0—5—0

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களில் ன்பணம் கட்டக் கூடியவர்கள் தேவை.

சென்னை மாவட்ட
தி. மு. க. 2-வது
சமூக சீர்திருத்த-அரசியல்
மாநாடுகள்

இடம்:— சென்னை சிந்தாதிரிப்பேட்டை
நேப்பியர் பார்க்
நாள்:— ஜூலை 11, 12, சனி, ஞாயிறு

முதல் நாள் - சமூக மாநாடு
தலைவர்:— எஸ். வி. லிங்கம்
துவக்குபவர்:— ஆர். பாலகுருசாமி

இரண்டாம் நாள் - அரசியல் மாநாடு
தலைவர்:— சிவசண்முகசுந்தரம்
துவக்குபவர்:— எஸ். வீரபாகு

இரண்டு நாட்களிலும் அறிஞர் அண்ணா அவர்களும், கழகச் சொற்பொழிவாளர் களும் பிறரும் கலந்துகொள்வர்.

இரண்டு நாட்களிலும் நாடகங்கள் உண்டு.

ஏ. ஆர். சேஷாசலம்
வ. செயசந்திரன்
செயலாளர்கள்

கே. எம். கண்ணபிரான்
வ. கு. தலைவர்

மன்றம்
பதிப்பக வெளியீடுகள்

கண்ணீரும் செந்நீரும் —இரா. நெடுஞ்செழியன்	ரூ. 0-12-0
ராஜாதி ராஜா —இரா. செழியன்	ரூ. 0-12-0
பொது அறிவு —இரா. செழியன்	ரூ. 0- 8-0
மறைந்த திராவிடம் —இரா. நெடுஞ்செழியன்	ரூ. 0- 3-0

மன்றம் பதிப்பகம்.
26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.
t MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS 1.